# பாலர் ஞானோதயா நற்பணி மன்றம்

(கட்டுவன் - வறுத்தலைவிளான் - மயிலிட்டி தெற்கு)

## இரண்டாவது ஆண்டு விழா

## மலர் - 1

பாலர் ஞானோதயா நற்பணி மன்றம்

FRANCE

பிரான்ஸ்

2006

# எமது கிராமத்து மண்வாசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BAZAR 2001



**உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதே எமது சேவை.**

உங்களின் இல்லத்திற்கு தேவையான
உபபொருட்களையும், விளையாட்டுப்
பொருட்களையும், அன்பளிப்புகள்,
சோடனைப் பொருட்கள்,
மேலும் அனைத்து விதமான
பொருட்களையும் தரமாக பெற்றுக்கொள்ள
இன்றே நாடவும்.

**5, Av. Paul Vaillant Couturier**
**93120 La Courneuve**
**Tél. : 01 48 35 40 82**
**(M° : la Courneuve)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தி விளம் பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காணிக்கை



எமது கிராம மக்கள் சிதறிவிடாதிருக்க ஒரு அமைப்பை
ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைந்து, தான் சார்ந்த சமூகத்திற்கு
நற்பணி ஆற்ற வேண்டுமெனவும், அவர்கள் தங்கள் சொந்தங்களுடன்
தமது இன்ப துன்பங்களை பகிர்ந்துகொள்ள ஓர்
ஒன்று கூடல் நடாத்த வேண்டுமெனவும் எமது
கிராமப் பெரியோர்கள் கூறிய அறிவுரைக்கு தலைதாழ்த்தி
இரு கரம் கூப்பி அவர்களுக்கே இம் மலரினை காணிக்கையாக்கி
மனநிறைவுடன் வணங்கி வாழ்த்துகின்றோம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்.......


| | |
|---|---|
| ❑ ஆசியுரை - ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் | 4 |
| ❑ ஆசிச்செய்தி - காப்பாளர் | 5 |
| ❑ தலைவரிடமிருந்து.... | 6 |
| ❑ செயலாளரிடமிருந்து | 7 |
| ❑ பொருளாளரிடமிருந்து.... | 9 |
| ❑ உபதலைவரிடமிருந்து..... | 10 |
| ❑ உப செயலாளரிடமிருந்து... | 11 |
| ❑ உப பொருளாளரிடமிருந்து... | 12 |
| ❑ ஆசிச்செய்தி - திரு. காராளபிள்ளை | 13 |
| ❑ வாழ்த்துரை என். சண்முகலிங்கன் | 14 |
| ❑ யாழ்ப்பாணத்தில் மறுக்கப்பட்ட வாழ்விட உரிமை | 16 |
| ❑ புலம் பெயர் தமிழர்களின் கல்வி கலாச்சார சமூக பொருளாதார மேம்பாடுகள் | 26 |
| ❑ ஞானோதயாவின் ஒளி பிறந்தது | 31 |
| ❑ வித்துவசிரோமணி கணேசையர் பற்றிய சில குறிப்புகள் | 33 |
| ❑ நாட்டார் கலையில் கட்டுவனூரின் பதிவுகள் | 38 |
| ❑ கலையும் கலாச்சாரமும் | 44 |
| ❑ எனது தாய்மொழி | 48 |
| ❑ நன்றியுரை | 52 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

# Sri Durgadevi Devasthanam
**Tellippalai, SriLanka.**

தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**

**President:**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P.**

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை



## பிரான்ஸ் பாலர் ஞானோதயா சபை
## ஆசியுரை

எங்கள் தமிழ் மக்கள் இன்று உலகம் எங்கும் பரவி வாழ்கின்றனர். தமது வாழ்வை பொருள் தேடுவதில் மாத்திரம் நிறுத்தி விடாது. சமய, சமூகப் பணிகளையும் இணைத்துக் கொள்ளுகின்ற சிறப்பு எம்மவருக்கு உண்டு. பிரான்ஸ் நாட்டிலே பணியாற்றுகின்ற எங்கள் யாழ்ப்பாண மக்கள் தாங்கள் வாழ்ந்த சொந்த இடங்களை மிகவும் நேசிக்கிறார்கள். அந்த வகையிலே தெல்லிப்பழை கிழக்கு கட்டுவன் பகுதியிலுள்ளவர்கள் இன்று புலம் பெயர்ந்து விட்டார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் இன்று பிரான்ஸ் நாட்டில் கடமை ஆற்றிக் கொண்டு கலை, கலாச்சார நிகழ்ச்சிகளையும், பேணிக்காத்து வளர்த்து வருகின்றார்கள். அங்கு ஆற்றி வருகின்ற சேவை பெருமதிப்பிற்குரியது «பாலர் ஞானோதயா சபை» என்ற நிறுவனத்தை மறக்காது அந்த நாட்டிலும் அதனை நிறுவி வளர்த்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்தச் சபைக்கு ஆசி கூறுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. எனவே மேற்குறிப்பிட்ட சபையை வாழ்த்துகிறேன். பல்லாண்டு காலம் இச்சபை நற்பணியாற்ற வேண்டும் என்று தெல்லிப்பழை துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

இந்த உலகத்திலே எதையும் சாதிக்கும் வல்லமையுள்ளவர்கள் தமிழ் மக்கள். எந்த நாட்டில் வாழ்ந்தாலும் வேறுபடுத்திக்காட்டும் ஒரு தனிச்சிறப்புத்தன்மையுள்ள அறிவாற்றலும் ஓர் அற்புதமான சங்கம சக்தியும் கொண்டவர்கள் நம் தமிழ் மக்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சிறந்த முறையில் இயங்கிவரும் பாலர் ஞானோதயா நற்பணி மன்றம் இரண்டாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில் விழா நினைவாக வெளிவரவிருக்கும் விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தன்னலமற்ற தியாக சிந்தனையுடன் இக்கழகச் செயற்குழுவினர் சமூக மேம்பாட்டுக்காகவும், கலை கலாச்சாரத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும், ஆற்றிவரும் சேவை புலம் பெயர்ந்து இங்கு வந்த எமது கிராம மக்களிடையே தமிழ்மொழியறியாது ஒரு தலைமுறை உருவாகிவிடாதென மட்டுமின்றி வருங்கால இளைஞர்களும் தன்னலமற்ற பொது நல சேவையாளர்களாக உலகளாவிய ரீதியல் இம்மன்றத்தின் பெருமையை பறைசாற்றுவார்கள் என உறுதியாக நம்புகிறேன். இக்கழகம் மென்மேலும் பொலிவு பெற்று வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா கொண்டாடும் நிலையை எய்த வேண்டுமென இறைவனை வேண்டி எனது நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''வாழ்க உங்கள் பணி, மலர்க உங்கள் சேவை பெறுக இவ்வையகம்''

நன்றி

மா. முத்துக்குமாரு
காப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரிடமிருந்து...

என் அன்பு உள்ளங்களே !

''மண்வாசனை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
முதியோரை ஒரு போதும் இகழ வேண்டாம்
செய்வோரை ஒரு நாளும் தூற்ற வேண்டாம்
செய்தோரை ஒரு போதும் மறந்திட வேண்டாம்''

இங்கு நாம் தொடங்கி நடாத்தி வரும் இந்த பாலர் ஞானோதயா நற்பணி மன்றத்தில் செயற்குழுவிற்கு அதிக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட போது நான் பெரும் மகிழ்ச்சி அடைந்தாலும், இப்பொழுது திறமையுள்ள இளைய தலைமுறையினரும் ஆற்றல் வாய்ந்த, கலை உணர்வுள்ள பெண்களிருந்தும் அவர்கள் முன்வராததும், ஆர்வமுள்ள குழந்தைகளை பெற்றோர் தந்துதவ பின் நிற்கின்றமையும் மனதிற்கு சிறிது வேதனையாக இருக்கிறது.

வருங்காலத்தில் எமது மக்களின் மேம்பாட்டிற்காக செயற்குழு உறுப்பினர்கள் மட்டுமன்றி, ஏனைய அனைவரும் எம்முடன் சேர்ந்து எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும், எமது இனத்தின் மேம்பாட்டிற்காகவும் மட்டுமின்றி, இம்மன்றம் வலுவுடன் தலைநிமிர்ந்து இயங்க ஒத்துழைப்பு வழங்குவார்கள் என உறுதியாக நம்புகிறேன். எந்த ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் இளைய சமுதாயத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. அத்துடன் அவர்களின் பங்களிப்பானது ஆக்க பூர்வமானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

எமது இளைய தலைமுறையினர் ஒற்றுமையாய் முழு மனத்துடனும், நல் எண்ணத்துடனும், சமூகப் பணியில் ஈடுபட்டால் எமது கிராம மக்கள் மிகப்பெரும் பாக்கியம் பெற்றவர்களாக திகழ்வார்கள். இளைய சமுதாயத்தினரின் ஆற்றல்களை, அவர்களின் கலைச்சிந்தனைகளை, செயற்பாட்டுத் திறன்களை வெளிக்கொண்டுவர உதவுவதற்கு ஒரு தளமாகவே இம்மன்றம் அமைக்கப் பட்டுள்ளது. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற்றுவது உங்கள் கைகளிலேயே உள்ளது. உங்கள் அனைவரினதும் வாழ்வு வளம் பெறவும், எமது சமூகம் புதுப்பொலிவு பெற்று இந்த நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு இணையாக வாழவும், உங்கள் அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து இணைந்து செயலாற்ற வேண்டியது உங்கள் அனைவரின் கடமை என அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பண்டிதர்கள், பட்டதாரிகள், வீரர்கள், வியாபாரிகள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள், கைத்தொழிலாளர்கள், கமத்தொழிலாளர்கள் நிறைந்து விளங்கிய கிராமம் எங்கள் கிராமம். ஆனாலும் இன்றைய எமது இளைய தலைமுறையினர் அவர்களையும் விட மிஞ்சும் அளவுக்கு புலமை பெற்று திகழ வேண்டும் என்றும், எங்கள் கிராம மக்கள் மன அமைதியுடனும், வளமுடனும், மகிழ்ச்சியுடைய ஒரு தமிழ்ப் பண்பாட்டுக் காவலர்களாகவும் வாழவேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளீர்
என்ற நமது பண்பாட்டுச் செய்தி உலகமெல்லாம் பரவிடவேண்டும்

வாழ்க தமிழ்
வாழ்க பாலர் ஞானோதயா நற்பணி மன்றம்

நன்றி

ஞானம் பீரிஸ்
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரிடமிருந்து...

இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து செயலாளர் பதவியை ஏற்று செயற்குழுவினர்களின் ஒத்துழைப்புடன் இக்கழகத்தை வழிநடாத்தி வருகிறேன்.

கட்டுவன், வறுத்தலைவிளான், மயிலிட்டி தெற்கு கிராமங்களை சேர்ந்த மக்களில் பலர் மறவா மனிதர்கள். அன்பு பொதிந்து அறிவுரை சொல்லி தியாக சிந்தனையுடன் வாழ்ந்தவர்கள், செயல்பட்டவர்கள். மக்கள் மீது பற்றுக் கொண்டு, மக்கள் வாழ்க்கையின் முன்னேற்றதிற்கு அயராது உழைத்தவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்வது எமது பணியாகும். பெரும் கல்விமான்கள் இலக்கிய இலக்கணவித்தகர்கள், வெளிநாடு சென்று உயர்தர கல்வி கலையாய்வு செய்வோர் பலரும் இவ்வூர் மக்களாவார். தொல்காப்பிய மீறாகவுள்ள தொல்லிலக்கணங்களையும், சங்கச் சான்றோர் கால இலக்கியம், பிற்கால இலக்கியங்கள், பஞ்சகாவியங்கள், புராண இதிகாசங்கள், தருக்க சாத்திரங்கள் ஆகியவற்றையும் கற்றுத் தேறிய வித்துவ சிரோமணி பிரமஸ்ரீ சி.கணேசையரும் இக்கிராமங்களைச் சேர்ந்தவரே. பொதுச் சேவை ஒரு தொழில் அல்ல. அது ஒரு புனிதமான பணி. ஒருவர் தனது நாட்டிற்கும் மக்களுக்கும், சேவை செய்வதற்கு பொது நல அமைப்புகள் எல்லா நாடுகளிலும் இருக்கும் மிகச் சிறந்த கட்டமைப்பாகும். பொதுச்சேவை மிக விருப்பத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் பணியாற்றுபவர்களுக்கே உரித்தாகும். இம்மன்றம் பணம் திரட்டுவதற்காக செயற்படும் ஒரு அமைப்பல்ல என்பதை எமது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது கிராமத்து மக்கள் தமது இனத்தில், மொழியில், கலாச்சாரத்தில் பற்று வைக்க வேண்டும். பொதுச்சேவை தனித்துவத்துடன், பொது நோக்குடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. எந்த ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளும் நில்லாது நற்பண்பு, தன்னிறைவு பேணிக்காத்து வாழ்வை நெறிப்படுத்துவதே உயர் மானிடம். தமிழ் என்ற சொல்லில் தமிழ் இனத்தின் வரலாறு, தமிழ்ப்பண்பாடு, தமிழர்களின் அடிப்படைக்கருத்து, உலக நோக்கு ஆகியன அடங்கும். அத்தகைய செறிவுள்ள தமிழ் தரும் தனித்துவத்தை பேணி வளர்த்தல் எமது கடமையாகும். சமூகப் பணி முற்று முழுதாக மக்களுடன் தொடர்புபட்டது மட்டுமன்றி மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கு செய்யப்படவேண்டியதைப்பற்றி சிந்திப்பதற்கானது. பல்கலைக்கழக கல்வி ஆரோக்கியமான சமூக மாற்றத்தினை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை. இளைய தலைமுறையினரே வரும் காலம் சமூகம் உங்களை உயர்ந்த உள்ளம் உடையவரென்றும், உரிய பெறுமானங்களடங்கிய உத்தமர்களென்றும் புகழ்ந்து பாட மனம் தளரா நம்பிக்கையுடன் அத் தளத்தை அடைய மன உறுதியுடன் செயற்படுங்கள். உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு தளம்தான் இக்கழகம். எமது கிராம மக்களே, வெறும் வேடிக்கை பார்ப்பவர்களாக இருந்து விடாது இம்மன்றத்திற்கு உங்கள் பங்களிப்பை வழங்குங்கள். பொருளாதாரத்தை மட்டும் நிறைவு செய்தால் உங்கள் வாழ்க்கை பூரணத்துவம் பெற்றுவிடாது. சமுதாயத்துறையிலும் உங்கள் சேவை அதி முக்கியம் என்பதை மறந்து விடாதீர்கள். எமது கழக செயற்பாடுகளை, செயல்திட்டங்களை முழுமைப்படுத்தும் நோக்குடன் எமது கிராமங்களில் ஒவ்வொரு துறையிலும் ஆர்வம் உள்ளவர்களையும் திறமையுள்ளவர்களையும் எம்முடம் இணைந்து உங்களால் முடியுமான பங்களிப்பை நல்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

நன்றி

த. வீரபத்மன்
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாளரிடமிருந்து...

காலத்தின் அலகுகளை மீள நினைக்கையில் நாம் கடந்து வந்த இரண்டு ஆண்டுகளில் எமது மன்ற அங்கத்தினர்கள் தன்னலம் கருதாது ஆற்றிய தொண்டுகள் மற்றும் மன்றப்பற்றாளர்கள் தூய உள்ளத்துடனும் புன் சிரிப்புத்தவளும் முகத்துடனும் இம்மன்ற வளர்ச்சிக்காக நல்கிய ஒத்துழைப்புக்கள், நன்கொடைகள், புரிந்துணர்வுடன் அளித்த உதவிகளுக்கும் முதற்கண் எமது மன்றத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

குழந்தைகளுக்கு தமிழ் மொழியின் பெருமையை உணர்த்த வேண்டும் என்பதற்காக «சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே அதை தொழுது படித்திடடி பாப்பா» என பாரதியார் பாடியுள்ளார். இந்த தமிழ் மொழிக்கு ஈடுணையற்ற தொண்டாற்றி இலக்கியத் துறையிலே, இலங்கை இலக்கிய வரலாற்றாசிரியராகவும், இலக்கிய உரையாசிரியராகவும், கம்பராமாயாண பாடாந்தர ஆய்வாளராகவும், மறைந்த வித்துவ சிரோமணி கணேசையர் (1878 - 1958) நினைவு கூரப்படலாம். அவரின் பணியை இரத்தினச்சுருக்கமாக எழுதியவர் ஐயரின் சிரேஷ்ட மாணவர் மறைந்த இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்களே. ஆகவே எமது கிராமத்துப் பெரியோர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாம் தொடர்ந்து தமிழ் மொழிக்கு செய்ய வேண்டியது எமது கடமையாகும்.

எமது செயற்திட்டங்களை திறமையாக செயல்படுத்துவதற்கு நிதி பற்றாக்குறையே காரணம். கடந்த «சுனாமி» அனர்த்தத்தினால் எமது இன மக்களுக்கு ஏற்பட்ட அவல நிலையில் அவர்கள் துயர்போக்கும் அளவுக்கு உதவி புரியாவிட்டாலும் நிதி நிலைக்கேற்ப பங்களிப்பை செய்தோம். பாரிசில் கடந்த விழாக்களில் கலந்து எமக்கு அழைப்பு விடுத்த விழாக்குழுவினர் அழைப்பை ஏற்று கௌரவப்படுத்தியுள்ளோம். எமது உறவுகள் இழப்புகளையும், எண்ணற்ற இன்னல்களையும், எதிர்கொள்ளும் இன்றைய காலகட்டத்தில் அவர்களுக்கு உதவுவதற்கு நாங்கள் விரும்பினாலும் எமது நிதிப்பற்றாக்குறை எமது கரங்களை கட்டிப்போட்டுள்ளதென கவலையுடன் எமது மன்றப்பற்றாளருக்கு தெரிவிப்பதுடன் கல்லாக, முள்ளாக இறுகியுள்ள உங்கள் மனதை மனித நேயமுள்ள மனதாக்கி எமது மன்றத்தின் செயற்பாடுகளின் மதிப்பீடுகளை உணர்ந்து உங்கள் பிள்ளைகள் வருங்காலத்தில் நற்பண்புள்ளவர்களாக, வரம்பு மீறி பேசாதவர்களாக, மூத்தவர்களையும் பெற்றவர்களையும் கனம் பண்ணி பரிந்து பேசுபவர்களாக வளர்த்தெடுக்கவும் இம்மன்றம் வெட்ட வெட்ட தளிர்க்கும் வைரமானபலன் தரும் மரமாக இச்சமூகத்தில் வளரவும் இம்மன்றத்தில் பணியாற்றும் பணியாளர்களின் சேவைகளை எமது கிராமமக்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பெறவும் விரைந்து வந்து உங்கள் பங்களிப்பை வழங்குங்கள் என உரிமையுடனும், அன்புடனும் வேண்டிக்கொள்கிறேன்.

''சிறு துளி பெரு வெள்ளம்''

நன்றி

சி. விஜயகுமார்
பொருளாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2004 / 2005 ஆண்டுக்கான வரவு செலவு விபரம்
## 29/08/2004 - 31/12/2005

| வரவு | | செலவு | |
|---|---|---|---|
| சந்தாப்பணம் | 720.00 € | | |
| நன்கொடைகள் | | | |
| இ. கருணாரட்ணம் | 200.00 € | சுனாமி | 500.00 € |
| கா. செல்வகுமார் | 500.00 € | மண்டப வாடகை | 450.00 € |
| சி. விஜயகுமார் | 100.00 € | உணவு வகைகள் | 280.66 € |
| ம. தர்மகுலசிங்கம் | 100.00 € | போட்டோ செலவு | 71.99 € |
| ஞானம் பீரீஸ் | 100.00 € | சோடனை | 49.00 € |
| வே. நந்தகுமார் | 100.00 € | பரிசில்கள் | 21.40 € |
| மா. முத்துக்குமார் | 50.00 € | DVD, VHS பதிவு | 330.00 € |
| சி. சந்திரகுமார் | 100.00 € | | |
| ரா. சிவபாதம் | 100.00 € | | |
| கா. முரளிதாஸ் | 150.00 € | | |
| சி. வரதராசா | 50.00 € | | |
| க. சண்முகநாதன் | 200.00 € | | |
| ந. யோகராசா | 50.00 € | | |
| க. யோகேஸ்வரன் | 50.00 € | | |
| இ. உதயசுதன் | 50.00 € | | |
| க. குகன் | 100.00 € | | |
| சி. ஜெயகரன் (சேகர்) | 200.00 € | | |
| சிறிகரன் DVDக்காக | 150.00 € | | |
| மகேந்திரன் DVDக்காக | 150.00 € | | |
| க. துரைராஜா London | 100.00 € | | |
| DVD, VHS விற்றது | 245.00 € | | |
| மொத்தம் | 3 565.00 € | மொத்தம் | 1 703.05 € |
| 01.01.2006 மொத்தம் கையிருப்பு | | | **1 861,95 €** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கிராமத்து கவிஞன்

பேராசிரியர் நா. சண்முகலிங்கன்



பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட அறிமுகம் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு மேலானது. இவர் மகாஜனக் கல்லூரியிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் மாணவனாக விளங்கிய காலத்தில் நாடகம், கவிதை என பல துறைகளிலும் தனது முத்திரையைப் பதிய வைத்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் அரசறிவியல், சமூகத்துறைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தமது பணியினைச் செய்தார்.

இவர் சமயம், சமூகவியல், நாட்டுப்பாடல், நாடகம் சார்ந்த துறைகளில் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் தமிழர் கலை கலாச்சாரத்திலும், சமூகப்பணியிலும் நிறைவு காண்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக சுனாமியினாலும் ஏற்பட்ட அனர்த்தங்களை நேரடியாக பார்வையிட்டு எழுதிய கட்டுரைகள் சான்று பகிர்கின்றது.

1974ம் ஆண்டு யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்டபோது அப்போதைய அதன் தலைவராக பணிபுரிந்த பேராசிரியர் க. கைலாசபதி 1975ல் தமிழ்த்துறைப் பொறுப்பு விரிவுரையாளராக பதவியேற்ற பேராசிரியர் அ. சண்முகதாஸ் போன்றோரின் நன்மதிப்பைப் பெற்றவர். தமிழர்கலை கலாச்சார நிறுவனங்களோடும் தமது தொடர்பினைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பவர். சாதாரண மக்களுக்காக பட்டி தொட்டி எங்கும் சென்று இயல், இசை, நாடகம், சமூகவியல் பற்றி கருத்தாழத்தோடு சொற்பொழிவுகள் ஆற்றி அவர்களின் நன்மதிப்பையும் பெற்றவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைக் கட்டுப்பாட்டாளராக கடமையாற்றிய காலஞ்சென்ற திருமிகு எஸ். கே. பரராசசிங்கம் எமது கிராமத்தைச் சேர்ந்தவர். பேராசிரியர் சண்முகலிங்கன் இயற்றிய பல கவிதைகளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் திருமிகு பரராசசிங்கம் இசையமைத்து தனது சொந்தக்குரலில் பாடி மக்களின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. 1975ம் ஆண்டு பாலர் ஞானோதய கலை உடல் வளர்ச்சிக் கழகத்தின் வெள்ளி விழா மலரில் இவரால் எழுதப்பட்ட "பொன்னுலகின் காதலர்கள்" என்ற கவிதை வெளிவந்து பலரின் பாராட்டைப் பெற்றது. பேராசிரியர் சண்முகலிங்கன் அறிவாளர், பண்பாளர், குன்றாத இளமையுடனும் குறையாத சுறுசுறுப்புடனும் பணியாற்றி வருகிறார். எவரின் மனமும் நோகப் பேசி அறியாதவர். இன்றும் தமது ஆசிரியர்களை மூத்தவர்களைப் போற்றி மதிக்கும் பெரும் பண்பு கொண்ட பேராசிரியர். எமது கிராமத்தவரின் சொத்தாகத் திகழ்கின்றார். அன்பும், பண்பும் இனிய சுபாவமும் உடையவரும், மொழிப்பற்றும், சமூகப்பற்றும் மிக்கவராகவும் பழகுவதற்கு இனியவராகவும் விளங்குகின்றார்.

நன்றி

**மை. தர்மகுலசிங்கம் (தம்பி)**
**உப தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப செயலாளரிடமிருந்து ........



### எமது கிராமத்து கலை உடல் வளர்ச்சி விளையாட்டுக்கழக சாதனைகள்.

செந்தமிழ் வித்தகர்களும், சமூக மேம்பாட்டாளர்களும், பக்திமான்களும் மட்டுமின்றி வீரமும் விவேகமும் உள்ள மக்கள் நிறைந்து வாழ்ந்ததாக எமது கிராமத்தைப் பற்றி வரலாறுகள் கூறுகின்றது. கலைத்துறையிலும் எமது கிராமமக்கள் சாதனைகள் படைத்து எமது கிராமத்திற்கு பெருமை தேடித்தந்துள்ளார்கள்.

1948ம் ஆண்டு தொடக்கம் 1950ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடந்த கழகங்களின் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து பல விருதுகள் பெற்று எமது கிராமங்களின் சிறப்பியல்களை எடுத்துக்காட்டியுள்ளனர். 1950ம் ஆண்டு தொடக்கம் 1956ம் ஆண்டு காலப்பகுதியில் வசந்தன் நாடகம் பல கிராமங்களில் நடைபெற்ற விழாக்களில் சிறப்பு நிகழ்ச்சியாக எமது கிராம இளைஞர்களால் ஆடப்பட்டு பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றது. 1956ம் ஆண்டு இக்கலைக்குழு இலங்கை வானொலி நிலையத்தில் வசந்தன் நாடகத்தை ஆடி மக்களை வியப்பில் ஆழ்த்தி பரவசமடையச் செய்துள்ளனர். அதே ஆண்டில் வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங்களில் கலை நிகழ்ச்சியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றுள்ளதுடன் அனார்க்கலி, சோக்கிரட்டீஸ் போன்ற நாடகங்களையும் மேடையேற்றினர்.

1957ம் ஆண்டு எமது கிராமத்துக் கழகத்துக்கும் குரும்பசிட்டி விளையாட்டுக் கழகத்துக்கும் நடந்த போட்டியில் எமது கழகம் அமோக வெற்றியீட்டியது. 1958ம் ஆண்டு குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினரால் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து வெற்றிக் கிண்ணத்தை பெற்றனர். அத்துடன் காங்கேசன்துறை றோயல் விளையாட்டுக் கழகம் நடத்திய சுற்றுப் போட்டியில் கலந்து இரண்டாவது பிரிவினர் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். 1959ம் ஆண்டு எமது கிராம இளைஞர்கள் பல நாடகங்களில் நடித்ததுடன் "அமரசிற்பி" என்னும் நாடகத்தை அரங்கேற்றினர்.

1960ம் ஆண்டு அவ்வாண்டின் வலி வடக்கு கிரிக்கட் சாம்பியன்களாக திகழ்ந்த றோயல் கழகத்துடன் எமது கழகத்தவர்கள் விளையாடி தோற்கடித்தனர். அவ்வாண்டு யாழ்ப்பாண மாவட்டம் சனசமூக நிலையங்களுக்குள்ளே நடந்த கலைப்போட்டிகளிலும் கலந்து முதலாவது இடத்தைப் கைப்பற்றியது. 1966ம் ஆண்டுவரை எமது கிராம இளைஞர்கள் யாழ்ப்பாண உதைப்பந்தாட்ட தெரிவுக்குழு, கிரிக்கட் தெரிவுக்குழு, கொக்கி தெரிவுக்குழு ஆகியவற்றில் அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது.

1963ம் ஆண்டு குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடாத்திய உதைப்பந்தாட்ட போட்டியில் முதலாவது பிரிவினர் சாம்பியன்களானார்கள். 1964ம் ஆண்டு நடந்த உதைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாவது பிரிவினர் சாம்பியன்களானார்கள். 1965ம் ஆண்டு எமது கிராமத்து கழகத்தால் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியிலும் வெற்றி கண்டனர். 1967ம் ஆண்டும் உதைப்பந்தாட்டச் சுற்றப்போட்டி, மென்பந்து கிரிக்கட் போட்டிகள் நடத்தி வெற்றிவாகை சூடினர். 1970ம் ஆண்டு உதயதாரகை விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதலாவது குழு வெற்றிபெற்றது. 1958ம் ஆண்டு எமது உதைப்பந்தாட்டக்குழு திரு. V. ஜெயராசசிங்கம் தலைமையிலும் 1970ல் திரு. N. பத்மநாதன் தலைமையிலும் 1963ம் ஆண்டு திரு. அ. சந்திரசேகரம் தலைமையிலும் விளையாடியது. 1973/74 காலத்தில் இலங்கை கொழும்பு இரத்தினம் உதைப்பந்தாட்டக்குழு பாகிஸ்தான், மலேசியா, பர்மா, பாங்கொங், சிங்கப்பூர், மேற்கு செருமனி, ருசியா, முதலிய நாட்டுக் கழகங்களுடன் விளையாடி 33 கிண்ணங்களைப் பெற்றது. இக்கழகத்தில் திறமையாக விளையாடியவர்களில் ஒருவர் திரு. N. அப்பையா எமது கிராமத்தவர். இலங்கை பூப்பந்தாட்ட கழகத்தில் ஒரு விளையாட்டு வீரராக இருந்து இந்தியா, பாகிஸ்தான், மலேசியா போன்ற நாடுகளுக்கு சென்று விளையாடியவர் Dr. N. இராசலிங்கம் இவரும் எமது கிராமத்தவரே.


வலிய உடலும், கூரிய அறிவும், செவ்விய உணர்வும் கொண்ட மனிதர்களை உருவாக்குவதே பாலர் ஞானோதயா நற்பணி மன்றத்தின் தணியாத தாகம்.

இ. உதயசுதன்
உப செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை எவ்வழியோ மகனும் அவ்வழி



கட்டுவன் மயிலிட்டி தெற்கு வறுத்தலைவிளான் பாலர் ஞானோதயா நற்பணிமன்றம் பிரான்ஸ் நடாத்தும் இரண்டாவது ஆண்டு விழா நடைபெறுவதையிட்டு உபபொருளாளர் ஆகிய நானும் எமது கிராம மக்களும் மகிழ்ச்சியடைகின்றோம்.

எனது தகப்பனார் ஆகிய திரு. கந்தர் சரவணமுத்து கந்தவனம் அவர்கள் 11.12.2003ல் இறைபதம் அடைந்தார்கள். கந்தவனம் அந்தமிற்புகழ் தென்மயிலை தந்தவனம்.

இவர் தமது வாழ்நாளில் பெரும்பகுதியைப் பொதுப்பணிக்காக செலவிட்ட பெரியார். எமது கிராமமக்களின் கல்வி, விளையாட்டு, கலச்சாரத் துறைகளின் மேம்பாட்டிற்காக 23.11.1922 இல் கிராமப் பெரியார்களால் தொடக்கப்பெற்ற பாலர் ஞானோதயா சங்கம், அந்தியகால சகாயநிதிச் சங்கம் (மரணச்சங்கம்) இளைஞர் சைவத் தொண்டர் சபை போன்ற அமைப்புகளில் பொறுப்பான பதவிகளில் அமர்ந்து அப்பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர்.

சிறந்த கூட்டுறவாளராகும், மயிலிட்டிக் கிராமசபை பிரிவுற்கு உட்பட்ட இணக்கசபை உறுப்பினராகவும், திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபை மயிலிட்டிப் பகுதிக்குப் பொருளாளராகவும் செயற்பட்டவர்.

அன்னாரின் சிறந்த சேவைகளை நம்முரவர் என்றும் நினைவில் வைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

நமது கிராமத்து முதியவர்கள் எப்படி நமது மண்ணில் ஒற்றுமையாக இந்த மன்றத்தை வளர்த்தார்களோ அதேபோல் நாங்களும் இந்த பிரான்ஸ் மண்ணில் நமது பாலர் ஞானோதயா நற்பணி மன்றத்தை அங்கத்தவர்களும், கிராமமக்களும் வாழையடி வாழையாக வளர்க்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்

**இப்படிக்கு உபபொருளாளர்**
**க. சண்முகநாதன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

புலம்பெயர்ந்த தமிழர்கள்மத்தியில் மொழி, கலை, கலாச்சார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஆங்காங்கு பல சமூகமுன்னேற்ற ஸ்தாபனங்கள் உருவாகிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அந்தவகையில் பாரிஸிலுள்ள பாலர் ஞானோதயா நற்பணி மன்றம் தனது 2வது ஆண்டு நிறைவாக விழா கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியதே.

இச்சங்கத்தின் நிர்வாகிகளும், உறுப்பினர்களும் இன, மொழி, கலை கலாச்சார மேம்பாடுகளில் தங்களை முற்றுமுழுதாக, முழுமனத்தோடு ஈடுபடுத்திக்கொண்டு செயற்படுவது பாராட்டுக்குரியதாகும். தன்னலமற்ற தியாகசிந்தையோடு நல்லபல நயத்தகு கருமங்களை ஆற்றிக்கொண்டிருக்கும் நிர்வாகிகள் கொண்ட இந்நற்பணி மன்றம் மென்மேலும் நல்லவளர்ச்சிகண்டு செயற்படவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இரண்டாவது வருட நிறைவையொட்டி வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**சி. காராளபிள்ளை**

**ஸ்தாபகக்காப்பாளர், பாரிஸ் தமிழர் கல்விநிலையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



பிரான்ஸ் பாலர் ஞானோதயா நற்பணி மன்றம் என்ற செய்தியில் நெஞ்சம் நிமிர்கின்றது.

ஊரைப்பிரிந்த உறவுகளைத் தொலைத்த மீளாத் துயரத்தின் வலி கூடத் தணிவதான ஒரு உணர்வுக் களிப்பு. யாழ்ப்பாண தேசத்தின் நாகரிக சமுதாய வளர்ச்சியில் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் கிராம புலத்தின் வாழ்வும் வரலாறும் இரண்டறக் கலந்துள்ளது. சங்கம் வளர்த்த சமுதாயம், சங்கத்தால் வளர்ந்த சமுதாயம். அயரா உழைப்பின் கமக்காரர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், எனப் பல்துறைசார் வல்லுனர்களை தேசத்துக்காக்கியது எங்கள் கிராமப்புலம்.

எங்கள் வாழ்வியல் நிறைவின் குறிகாட்டியாய் விளங்கிய அலவத்தை வீரபத்திரர் வசந்தன் நாடகத் தருக்களின் உயிர்ப்பு இன்னும் எங்களிடையே அப்படியே காக்கப்பட்டுள்ளது.

எங்கட பிள்ளையள் ஊரின் எல்லைகளைத் தாண்டி, உலகத்திற்கு நாகரிகம் சொல்லித்தரும் பிரான்ஸ் பண்பாட்டுப் புலத்தில் எங்கள் தமிழை, தமிழ் பண்பாட்டினை வளர்க்க பிரான்ஸ் ஞானோதயா நற்பணி மன்றம் அமைத்து இரண்டாவது ஆண்டு விழாவினை கொண்டாடும் இந்த வேளையில், தாயகத்தில் இருந்து வாழ்த்தக் கிடைத்த இந்தப் பேற்றினையிட்டு பெரிதும் உவக்கின்றேன்.
கிராமத்து மேம்பாட்டுக்கென உழைத்த, உழைக்கும் ஆத்ம வல்லமைகள் அனைத்தும் உங்களைச் சேரும். உங்கள் பணிகள் மேன்மேலும் விளங்கும்.
நாளைய பொழுதில் மீண்டும் எங்கள் அலவத்தை வீரபத்திரர் கோயில் செம்பாட்டு மணல் பரப்பில் செம்மண் புழுதி கிளம்ப வசந்தனாடி எங்கள் பிறவிப்பயனை பெறும் அந்த நாள் வரும்.

ஊர் கலந்து உயிர் மகிழும் அந்த பொழுதிற்கான தவத்துடனும் ஆசியுடனும்

**உங்கள் அன்பின்**

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
**சமூகவியல் பேராசிரியர்,**
**தலைவர், அரசறிவியல் - சமூகவியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினர் திரு. திருமதி துரைராசா



நிர்வாகசபை உறுப்பினர்களுடன் பிரதம விருந்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மறுக்கப்பட்ட வாழ்விட உரிமை

## உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான சமூகவியல் விசாரணை

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
**சமூகவியல் பேராசிரியர்,**
**தலைவர், அரசறிவியல் - சமூகவியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

என்னுடைய அப்பாவும்
என்னாசை அம்மம்மாவும்
எத்தனை நாள் வாழ்ந்த தெங்கள்
வீடும் வளவும்.........
யார் யாரோ குடியிருக்கும்
சுடலையாகுமோ......

தங்கச்சியும் நானும்
கெந்தி விளையாடிய
முத்தத்தை மறந்து போவனோ......
எங்கு சென்ற போதும்
எந்தன் உயிர் ஊரின்
சொந்தங்களை மறந்து வாழ்வனோ.......

சின்னக்கிளி, ராசா அண்ணை....
செத்த கதை அறிந்தும்
அன்னியனை ஊரில் விடுவனோ.......
எந்தன் பிள்ளை நாளை
ஊரையறியாமலே
அகதி என்றே அலைய விடுவனோ....

- சண்முகபாரதி

வாழும் சுதந்திரம், வாழ்விட சுதந்திரம் என்றெல்லாம் மனித, சமூக உரிமை பிரகடனங்களுக்கு குறைவில்லை. ஆயினும் மக்கள் வாழ்வியல் உரிமைகள் மறுக்கப்பட்டு உலகப் பரப்பெல்லாம் சனநாயக மீறல்களை செய்தபடி பல்வேறு அரசுகளும் மேற்கொள்ளும் பயங்கரவாதம் பற்றி, கேள்வி கேட்பதற்கு கூட இந்த பிரகடனங்களை கட்டியாள்பவரிடம் நியாயமனது இருப்பதில்லை. இந்த வகையில் இலங்கையின் இனப்பிரச்சினையின் மிக்க கொடிய மனித - சமூக துயர் வலயமாக அமையப்பெற்றுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சமூகவியல் விசாரணையாக இந்தக் கட்டுரை அமைகிறது.

தலைமுறை தலைமுறையாகத் தாம் வாழ்ந்து வந்த நிலப்பரப்புகளை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்து, அதற்கு இட்ட பெயர்தான் அதிஉயர்பாதுகாப்பு வலயம். இன்றைய குறியீட்டு சமூகவியலாளர் சுட்டுகின்றவாறு இந்தப் பதத்துக்கான சரியான அர்த்தத்தை பெற யாருக்கான அதிஉயர்பாதுகாப்பு? என்ற வினா தவிர்க்கமுடியாதது ஆகின்றது. இராணுவத்திற்கான அதிஉயர்பாதுகாப்புக்காக மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு விரட்டப்பட்டு அகதிகளாக அலையத்தொடங்கி ஆண்டுகள் 19 ஆகின்றது. மக்களுக்கான பாதுகாப்புக்கான படைகள் என்றே சொல்லப்பட்டாலும், இந்தப் படைகளின் செயற்பாடுகள் இன்றுவரை இம்மக்களை தம் வாழ்விடங்களில் இருந்து துரத்துவதாக, இம்மக்களைக் காணாமல் போகச் செய்வதாக, இல்லாதொழிப்பதாகவே அமைந்துள்ள உண்மை உலகறிந்தது. ஆனாலும் அறிந்த உண்மையை உலகம் எந்த அளவிற்கு உணர்ந்துள்ளது என்பது கேள்விக்குரியது. இந்த வகையில் இந்த ஆய்வின் பண்பறிசார் நேர்காணல்களின் வழி பெறப்பட்ட தரவுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது. மக்களின் அன்றாட சமூக பொருளாதார நடவடிக்கைகளுடன் இரண்டறக் கலந்துள்ள யாழ். குடாநாட்டின் 16 சதவீதத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களின் வாழ்விடங்கள் இந்த வகையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்கள் (Internally displaced people) என்ற பெயர் சூட்டப்பட்டு கடந்த இரண்டு தசாப்த காலமாக அகதிமுகாம் வாழ்வில் நலன்புரி நிலயங்கள் என்று இவற்றிற்கு நல்லபெயரும் இடப்பட்டுள்ளது. துன்பப்படும் மக்களின் அவலம், கடந்த நான்காண்டு சமாதான பேச்சுவார்த்தை காலத்தும் தீர்ந்தவாறில்லை. சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு இந்தப் பிரச்சனை வந்த வேளைகளில் எல்லாம் தீர்ப்பு வழங்கும் ஸ்தானம் இராணுவத்தினருக்கே வழங்கப்பட்டுள்ளது. அன்றைய பலாலி இராணுவ முகாம் பொறுப்பாளராக இருந்து இன்று இராணுவ உயர் பதவியில் இருக்கும் சரத் பொன்சேகோ முதல் இந்திய நம்பியார் வரைக்கும் இந்த பிரச்சினைக்கான தீர்வு இராணுவ நிலை நின்றே நோக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரினாலான இந்த கொடுவலயம் பற்றி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னேதான் பெரிதும் பேசப்பட்ட போதும், இந்த துயரம் 1983 காலப்பகுதியில் தொடங்கிவிட்டது எனலாம்.

பலாலி படைத்தளம், விமான நிலைய விஸ்தரிப்பு என்று தொடங்கி 1987 ''ஒப்பிரேசேன் லிபரேசன்'' இராணுவ ஆக்கிரமிப்புகள் வலி. வடக்கின் வளமான தமிழ் பண்பாட்டுப் பிரதேசங்கள் பலவும் விழுங்கப்பட்டன. ஆய்வாளரின் தாய்மனை அமைந்த கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் கிராம புலங்கள் உட்பட 67 கிராம சேவையாளர் பிரிவுகள் ஆக்கிரமிக்கப்பட்டன. எல்லாமாக 21.414 குடும்பங்களைச் சேர்ந்த 79,334 பேர் வெளியேற்றப்பட்டனர். புள்ளி விபரங்கள் 13000 ஏக்கர் விவசாய நிலம். பொருள்வளமாக காசுப் பயிர்களை தந்த பல ஏக்கர் செம்மண் பரப்பு இது.

தொடரும் போர் அவலத்தில் இந்த அதி உயர்பாதுகாப்பு வலயங்களும் விரியும். என்று யாழ்.குடாநாட்டின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களௌன இனங்காணப்பட்ட பிரதான பகுதிகள் :

1. காரைநகரிலிருந்து காங்கேசன்துறை ஊடாக வயாவிளான் வரையான கரையோரப் பகுதியும் பலாலி, வயாவிளான், தெல்லிப்பழை இணைந்த 49 சதுர கிலோ மீற்றர் கொண்ட வடநிலப்பரப்பும்

2. தனங்கிளப்பு, அறுகுவெளி, அரியாலை உள்ளிட்ட தென்பகுதி

3. மணற்காட்டிலிருந்து தெற்கே கிளாலி வரையான குடாநாட்டு நிலப்பரப்பிலிருந்து பெருநிலப்பரப்புக்குத் தொடர்பாக குறுக்கறுப்புப் பிரதேசம்.

4 பருத்தித் துறையில் பலப்பை மற்றும் வல்வெட்டித்துறைப்பகுதி

5. ஊருண்டி (ஊர்காவற்றுறை, மண்டைதீவு, வேலணை கிழக்கு)


வீட்டுக்கு சொந்தமானவன் அகதி முகாமில் அல்லல் பட, அவன் வீட்டில் இராணுவம் ''அதிஉயர் பாதுகாப்பு'' என்றபடி குடியிருக்கிறது.

இங்கு இழந்தது வெறும் நிலத்தையல்ல. நிலத்தோடு கலந்த வாழ்வியலை என்பதனை வகைமாதிரியாய்க் கீழே தரப்படும் ஒரு வலயம் தொடர்பான புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயம்

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 01. வலயத்தின் பரப்பளவு | 49 ச.கி.மீ |
| 02. இராணுவப்பிரிவு | திருவடிநிலை - கடற்படை<br>மாதகல் - கடற்படை<br>பலாலி - தெல்லிப்பழை - 511படைப்பிரிவு<br>வளலாய் - 515 படைப்பிரிவு |
| 03. முன்பு குடியிருந்த குடும்ப எண்ணிக்கை | 24816 |
| 04 முன்பு இருந்த வீடுகளின் எண்ணிக்கை: | 24594 |
| 05 இவ்வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை | 18939 |
| 06 இவ்வலயம் அமைந்துள்ள அல்லது ஆட்கொண்டுள்ள கி.சே. பிரிவுகளின் எண்ணிக்கை: | 38 |
| 07 இவ்வலயத்திற்குள் முடக்கப்பட்டுள்ள உற்பத்திக்கு ஏற்ற நிலவிபரம் | 8465 ஏக்கர் |
| 08 இதன் காரணமாக பாதிப்படைந்துள்ள விவசாயிகளின் குடும்ப எண்ணிக்கை | 14398 |
| 09. இவ்வலயத்திற்குள் முடக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் விபரம் | (விபரம் மறுபக்கத்தில்) |
| 10. இதன் காரணமாக பாதிப்படைந்துள்ள தொழிலாளர்களின் குடும்ப எண்ணிக்கை | 960 |
| 11. இவ்வலயம் காரணமாக பயனற்றிருக்கும் கடற்கரையின் தூரம்: | 30 ச.கி.மீ |
| 12. இதனால் பாதிப்படைந்துள்ள மீனவர் குடும்ப எண்ணிக்கை | தெல்லிப்பழை 1598<br>சண்டிலிப்பாய் 300<br>கோப்பாய் 285<br>சங்கானை 391 |
| மொத்தம் | 2574 |
| 13. மக்கள் செல்ல முடியாத ஆலயங்கள் | 180 |
| 14. மக்கள் செல்ல முடியாத பாடசாலைகள் | (விபரம் மறுபக்கம்) |
| 15. மக்கள் செல்ல முடியாத பொதுக்கட்டடங்கள் | (விபரம் மறுபக்கத்தில்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிறுவனங்கள்

| இல | பாடசாலைகள் | மாணவர் தொகை |
|---|---|---|
| 01 | தெல்லிப்பழை (கட்டடியபுலம் மகாவித்தியாலயம்) | 723 |
| 02. | அளவெட்டி சீனன் கலட்டி வித்தியாலயம் | 295 |
| 03. | பன்னாலை கனகசபை அ.த.க. பாடசாலை | 178 |
| 04. | கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் | 291 |
| 05. | அம்பனை அ.த.க. பாடசாலை(வடக்கு) | 87 |
| 06. | அம்பனை அ.த.க. பாடசாலை (தெற்கு) | 31 |
| 07. | கிரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி | 564 |
| 08. | வழித்துாண்டல் றோ.க.த.க பாடசாலை | 83 |
| 09. | சுப்பிரமணியம் தமிழ் வித்தியாலயம் | 154 |
| 10. | வீமன்காமம் மகாவித்தியாலயம் மாவிட்டபுரம் | 790 |
| 11. | மயிலிட்டி ஞானோதயா வித்தியாலயம் | 200 |
| 12. | வறுத்தலைவிளான் அ.த.க பாடசாலை | 300 |
| 13. | குரும்பசிட்டி பொன் பரமானந்தன் ம.வி | 568 |
| 14. | தெல்லிப்பழை தந்தை செல்வா | 612 |
| 15. | வசாவிளான் மகாவித்தியாலயம் (தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது) | 1216 |
| 16. | கட்டுவன்புலம் அ.மி.த.க பாடசாலை | 341 |
| 17. | வயாவிளான் றோ.க.த.க பாடசாலை | 423 |
| 18. | ஓட்டகப்புலம் றோ.க.த.க பாடசாலை | 130 |
| 19. | வசாவிளான் சிறி வேலுப்பிள்ளை | 65 |
| 20. | மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை | 705 |
| 21. | மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் | 874 |
| 22. | காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி | 1049 |
| 23. | காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஸ்ட வித்தியாலயம் | 530 |
| 24. | காங்கேசன்துறை றோ.க.த.க கல்லூரி | 108 |
| 25. | காங்கேசன்துறை மகாவித்தியாலயம் | 405 |
| 26. | விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 50 |
| 27. | கணேசா வித்தியாலயம் | 216 |
| 28. | ஊரணி கனிஸ்டவித்தியாலயம் | 207 |
| 29. | பலாலி சித்திவிநாயகர் | 514 |
| 30. | பலாலி அ.த.க பாடசாலை | 616 |
| 31. | பலாலி மேற்கு அ.த.க பாடசாலை (மூடப்பட்டுவிட்டது) | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலைகள்

| இல. | தொழிற்சாலையின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | சீமெந்து தொழிற்சாலைகள் | 02 |
| 02. | அலுமினிய தொழிற்சாலைகள் | 02 |
| 03. | வாளி தொழிற்சாலை | 01 |
| 04. | சவர்க்கார நிறுவனம் | 01 |
| 05. | கல் உடைக்கும் தொழிற்சாலைகள் | 12 |
| 06. | நெசவுத்தொழிற்சாலைகள் | 01 |
| 07. | அரைக்கும் ஆலைகள் | 27 |
| 08. | இனிப்புத் தொழிற்சாலை | 01 |
| 09. | வெதுப்பக உற்பத்தி | 19 |
| 10. | மர அரிவு தொழிற்சாலைகள் | 14 |
| 11. | அச்சகங்கள் | 05 |
| 12. | மின்பொறியியல் திட்டங்கள் | 23 |
| 13. | சீமெந்து நிறுவனங்கள் | 03 |
| 14. | பழரசத்தொழிற்சாலைகள் | 02 |
| 15. | மட்பாண்ட தொழிற்சாலைகள் | 02 |
| 16. | விவசாயநில நிறுவனங்கள் | 02 |
| 17. | நார்த்தொழிற்சாலைகள் | 03 |
| 18. | பலகைத்தொழிற்சாலைகள் | 01 |
| 19. | மின்சார உபகரணத்திருத்தகம் | 02 |
| 20. | நகைத்தொழிலகம் | 03 |
| 21. | எண்ணைத் தொழிற்சாலைகள் | 02 |
| 22. | வானொலி திருத்தகம் | 01 |

# வைத்தியசாலைகள்

1. பிரதேச வைத்தியசாலை
2. மத்திய மருந்தகம்
3. இருதய வைத்தியசாலை
4. கூட்டுறவு வைத்தியசாலை
5. ஈஸ்வரி மருந்தகம்
6. புற்றுநோய் வைத்தியசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழந்த வாழ்வும் வளமும்

குடாநாட்டின் பொருளாதாரம் விவசாயத்தையும் மீன்பிடியையும் ஆதாரமாகக் கொண்டது. மேற்கண்ட வலயங்களால் இழக்கப்பட்ட பொருள் வளத்தின் அளவினை இந்தப் புள்ளி விபரங்களின் வழி தெளிந்திடலாம்.

ஒவ்வொரு வலயத்திலும் ஒவ்வொரு வகையான இழப்பு. வலிவடக்கு செம்மண் பிரதேசம் தந்த காசுப்பயிர் உற்பத்தியும் தென்னிலங்கைக்கான ஏற்றுமதி வருமானமும் இன்று முற்றாக இழக்கப்பட்டுள்ளன. தனங்களப்பு வலயத்தில் வருடத்துக்கு 136540 கிலோ வரை தவறாது கிடைத்த நெல் உற்பத்தியை தந்த 2621 ஹெக்டேர் நெல் வயல் பரப்பு தரிசாகியுள்ளது. இந்த விவசாய புலங்களை நம்பி சீவனம் நடாத்திய தொழிலாளர் குடும்பங்களின் நிலை மிக மிக துயரம் தருவது. தென்மராட்சியிலிருந்து குடாநாட்டிற்கான முழுத் தேங்காய்க்கான தேவைகளையும் நிறைவு செய்த நிலை இன்றில்லை. ஏக்கர் கணக்கில் அவை அழிக்கப்பட்டு விட்டன

கண்ட மேடுகளைக் கொண்ட 292.6 கிலோமீற்றர் நீண்ட மீன்பிடிக்குச் சாதகமான குடாநாட்டின் கரையோரம் முழுமையும் 500 மீற்றருக்கு ஒன்றாக இராணுவ முகாம்கள்: 100 மீற்றருக்கு ஒன்றெனக் காவலரண்கள். இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் 57.2% தை 1977ல் கொண்டிருந்த யாழ்ப்பாணம் இன்று 3.0% மாக அருகிப் போயுள்ளது. ஆழ்கடலில் தொழில் செய்து வாழ்ந்த பல மீனவர்கள் இன்று கூலித் தொழிலாளர்களாகியுள்ளனர்.

தமிழர் பிரதேசத்தின் ஒரே பெரும் தொழிற்சாலை என விளங்கிய காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை சங்கொலி நிறுத்தப்பட்டதன் விளைவாக அடிப்படை வாழ்வியல் ஆதாரங்களை தொலைத்த குடும்பங்கள் ஆயிரமாயிரம்.

இந்த வலயப்பரப்புக்குள் கல்விச்சாலைகள் விழுங்கப்பட்டதால் ஏற்பட்ட இழப்பு ஈடுபட செய்ய முடியாது. நீண்டகால யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தில் விழுந்த பேரிடியாக இந்த அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள். தற்காலிக கொட்டில்களில் இயங்குபவை, வேறு பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டமை. மூடப்பட்டமை. அதியுயர் பாதுகாப்புவலய தொடுகோட்டிலுள்ளவை என இவற்றின் வகைப்பாடுகள். பாடசாலைக் கட்டமைப்பு குலைந்து மாணவர் கல்விச் சூழல் இழக்கப்பட்டு வினைத்திறன் குன்றிய நிலை.

மக்களின் வழிபாட்டுக்கான அனுமதி மறுக்கப்பட்ட ஆலயங்கள் 246 இப்பகுதியில் உள்ளன. வரலாற்றுப் புகழ் பெற்ற மாவிட்டபுரம் முருகனும், கீரிமலை நகுலேஸ்வரரும் பாஸ், பக்தர்கள் அல்லது அந்தியேட்டி பக்தர்களுக்காக மட்டும் காத்திருக்கும் அவலம்.

### அகதிமுகாம் வாழ்வவலம்

உதிரி உதிரியாக அமையப்பெற்றுள்ள அகதி முகாம்களில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவு, உடுவில் செயலர் பிரிவுகளிலுள்ள அகதி முகாம்கள் பற்றிய விபரங்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்கள்

| இல | நலன்புரி நிலையங்களின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | குடும்பங்கள் | | | அங்கத்தவரின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | உயர் பாதுகாப்பு வலயத்தால் இடம் பெயர்ந்தவர்கள் | ஏனைய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் | மொத்தம் | |
| 01 | குருவளை | 219 | 71 | | 71 | 233 |
| 02 | கோணாப்புலம் | 214 | 92 | | 92 | 341 |
| 03 | ஊரணி | 214 | 27 | | 27 | 100 |
| 04 | நீதவான் இல்லம் | 213 | 49 | | 49 | 172 |
| 05 | கெயர் இன்ரிஸ்ரி | 212 | 14 | | 14 | 66 |
| | மொத்தம் | | 253 | | 253 | 912 |

## உடுவில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்கள்

| இல | நலன்புரி நிலையங்களின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | குடும்பங்கள் | | | அங்கத்தவரின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | உயர் பாதுகாப்பு வலயத்தால் இடம் பெயர்ந்தவர்கள் | ஏனைய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் | மொத்தம் | |
| 01 | சபாபதிப்பிள்ளை | 169 | 145 | 0 | 77 | 606 |
| 02 | ஸ்ரேசன் முகாம் | 190 | 19 | 3 | 22 | 104 |
| 03 | மில் நலன்புரி | 190 | 12 | 0 | 23 | 81 |
| 04 | இக்கிராணி நலன்புரி நிலையம் | 200 | 66 | 0 | 2 | 18 |
| 05 | புகையிரதநிலைய நலன்புரி நிலையம் | 197 | 6 | 0 | 9 | 140 |
| 06 | பிள்ளையார் நலன்புரி நிலையம் | 199 | 31 | 0 | 6 | 35 |
| 07 | மற்றச்சி முகாம் 1 | 184 | 9 | 0 | 11 | 150 |
| 08 | முருகமூர்த்தி முகாம் | 184 | | 12 | 23 | 89 |
| 09 | இலந்தையடி முகாம் | 185 | 6 | 12 | 30 | 54 |
| 10 | ஆலடி முகாம் | 185 | 15 | 0 | 27 | 74 |
| 11 | பெரியமதவடி முகாம் | 196 | 22 | 0 | 23 | 75 |
| | மொத்தம் | | 331 | 27 | 253 | 1326 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிமுகாம் வாழ்வின் தாக்கங்கள் மிக மிகப் பயங்கரமானவை. யாழ் குடாநாட்டின் சமூகக்கட்டமைப்பையும், பண்பாட்டுத் தொடர்ச்சியும், இம்முகாம் வாழ்விடை பல்வேறு நெருக்கடிகளையும் நியமக் குலைவுகளையும் எதிர்கொள்கின்றன.

இந்த முகாம்களில் வாழ்விட வசதிகள் பற்றிய அவதானங்கள் அதிர்ச்சி தருவன. எடுத்ததுக் காட்டாக சுன்னாகம் முகாமில் 1127 பேருக்கு 20 x 20 அடி பரப்பென குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைவருக்குமென 18 மலசல கூடங்களும், 5 குழாய்கிணறுகளும் மட்டுமே உள்ளன. இவற்றினால் மக்களிடை பல சச்சரவுகள். சுகாதாரப் பிரச்சினைகள். இன்னுமின்னும் பல்வேறு விவகாரங்கள்.

இந்த முகாம்களிலேயே பிறந்து வளர்ந்த தலைமுறை எதிர்கொள்ளும் உளசமூகப்பிரச்சினைகள் மிகமிகக் கொடுமையானவை. ஏனைய ஒத்த வயதுப் பிள்ளைகளுடன் பழகும் சந்தர்ப்பங்களில்,
“உங்கட வீடு முகாமே உங்களுக்கென்று ஒரு வீடில்லையே”

என்றவாறான நிலைமைகள் தரும் தாழ்வு மனப்பாங்கிலிருந்து அவர்களை மீட்பதற்கு மார்க்கமில்லை. முகாம் வாழ் சிறுவர்களின் கல்வி கேள்விக்குரியதாகியுள்ளது. கற்க விருப்பம் கொண்டுள்ள பிள்ளைகளுக்கும் இசைவான சூழல் இல்லை. கூடவே குடும்ப பொருளாதார நிர்ப்பந்தத்தில் கல்வியை இடையில் விட்டுவிடும் அவலம்.

இந்த நலன்புரி நிலையங்களில் உள்ள மூத்த தலைமுறையினரின் ஒரே விருப்பமும் வேண்டுதலும்,
“எங்களை எங்கட வீட்டிலை இருக்க வழிசெய்ய மாட்டீங்களா”
கண்ணீர் மல்க அந்த சபாபதிப்பிள்ளை முகாம் முதியவர்.

“சாக முந்தி ஒருக்கா ஊரை பார்த்துவர வழி செய்ய மாட்டிங்களா?
அதே முகாமிலிருந்து அந்த ஆச்சி வல்லமை இல்லாத ஆய்வாளர்களாக அவர்களோடு சேர்ந்து அழமட்டும் முடிகின்ற அவலம் இன்னமும் தொடர்கின்றது. ஆய்வாளராக மட்டுமின்றி இந்த மண்ணிண் மைந்தனாகவும் வாழ்ந்த நாள் நினைவுகளின் வலியும், வாக்குமூலங்களும் இந்த சமூக விசாரணையின் தரவுகளாய் நீள்கின்றன.

வீரபத்திரர் கோயில் வீதி
செம்பாட்டு மணற்பரப்பில்
நாதஸ்வரக் கச்சேரி
மேளச்சமா லயங்களிலே
நாம் கலந்த நாட்கள் உடன் வேண்டும்

ஊமைக்குழல் ஊதி... ஊதி...
ஐயோ!
நெஞ்சு வெடிக்கும்
இந்த அவலம் முடிக்க
ஒரே ஸ்ருதியில்
ஆயிரமாய் நாதஸ்வரங்களில்
அடானா அலைகளே எழுக
பல்லாயிரமாய் தவில்கள் முழங்குக

நம் பிறவிப்பயன் மீள வேண்டும்
சந்தன மேடை 1992

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தை மேசையின் நம்பகம், நேர்மைத் தன்மை, மத்தியஸ்தம் வகிக்கும் உலக மனித உரிமைக்காரர்களின் நியாய மனம் என்பவற்றின் உண்மைத் தன்மையை பரீட்சிக்கும் களமாக “அதி உயர் பாதுகாப்பு வலயம்” மிகப்பெரிய கேள்வியாக முன்னுள்ளது. எல்லா மக்களும் தங்கள் சொந்த வாழ்விடங்களை மீளச் சேருகின்றதான நீதியான பதில்தான் எதிர்காலத்து இலங்கையின் சமாதானம், அமைதிவாழ்வு, ஜனநாயகம் என்பவற்றுக்கான அர்த்தம் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. சி. கணேசலிங்கம் அவர்கள் வரவேற்புரை வழங்குகின்றார்



காப்பாளர் உரை நிகழ்த்துகிறார்



தலைவர் திரு. ஞானம் பீரிஸ் உரை நிகழ்த்துகிறார்



பொதுச் செயலாளர் திரு. வீரபத்மன் அறிக்கை வாசிக்கிறார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களின் கல்வி கலாச்சார சமூக பொருளாதார நிலைப்பாடுகள்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே

உலகின் தொன்மை வாய்ந்த ஆறு மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி ஒன்றும் கன்னித்தமிழாகக் காட்சி தந்துகொண்டிருப்பது களிப்பூட்டுகின்றது. தமிழர்கட்கென அவர்களுக்கே உரித்தான தனித்துவம் வாய்ந்த கலாச்சாரம் பண்பாடு இருந்த போதிலும் தனியான ஒரு நாடு இல்லாதிருப்பது துர் அதிஷ்டவசமானதாகும். பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை.(The sun never sets in the British Empire) என பேராசிரியர் கார்லைஸ் கூறியுள்ளார். ஆனால் தமிழர்கள் வாழும் பகுதியில் சூரியன் அஸ்தமிப்பதில்லை என்ற அளவிற்கு உலகில் வடக்கே வார்தா தொடக்கம் தெற்கே குமரி வரைக்கும் மேற்கே ரொறன்ரோ தொடக்கம் கிழக்கே ரோக்கியோ வரைக்கும் தமிழர்கள் பரவி விரவி வாழ்கிறார்கள். இவ்வாறு வாழும் தமிழர்களில் மிகப் பெரும் பகுதியினர் ஈழத் தமிழர்கள் ஆவர். இலங்கை சுதந்திரமடைந்த பின் அங்கு வாழும் பெரும்பான்மை இனமான சிங்கள பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தமிழ் மக்கள் தங்கள் உயிர் பாதுகாப்புக் கருதி வெளியேறி பல்வேறு மேற்கத்திய நாடுகளில் அகதிகளாகக் குடியேறினர்.

எம் தமிழ் மக்கள் பிறந்த மண்ணை விட்டு அதிக அளவில் புறப்படத் தொடங்கிய காலம் 1983ம் ஆண்டு நடைபெற்ற இன அழிப்பு நடவடிக்கைக்கு பின்னரேயாகும்.

இவ்வாறாக புலம்பெயர்ந்த மக்கள் தாம் புகுந்து அகதி அடைக்கலம் தேடிக் கொண்ட ஐரோப்பிய நாடுகளில் சமூக உதவிப்பணத்துடன் கஸ்டமான வாழ்க்கையைச் சில காலம் தொடர்ந்தனர். ஆனாலும் ஒரு சில வருடங்களிலேயே அயராத உழைப்பு, ஊக்கம், சிக்கன வாழ்வு காரணமாக எம்மக்கள் பொருளாதார ரீதியாக ஓரளவு தம்மை நிலைப்படுத்தத் தொடங்கினர். கடின உழைப்பினால் முன்னேறி சிறு சிறு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். காலப்போக்கில் அகதி அந்தஸ்திலிருந்து பிரசாவுருமை அந்தந்த நாடுகளில் பெற்றுக் கொள்ளலாயினர். இலண்டனிலும், பாரிஸிலும் அவ்வாறாக வளர்ச்சி கண்ட எம் மக்கள் பலர் நகரத்தின் ஒரு சில பகுதிகளில் வர்த்தக நிலையங்களை ஆரம்பித்து அப்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துமளவிற்கு மேலோங்கியுள்ளனர். அந்தப்பகுதி வீதிகளில் நடமாடும்போது யாழ்ப்பாணம், கொழும்பு, வெள்ளவத்தை, புறக்கோட்டை வீதிகள் ஞாபகத்திற்கு வருவதுண்டு.

**தமிழ்க்கல்வி**

அந்தந்த நாட்டு மொழிகளிலேயே எமது அடுத்த சந்ததியினர்(சிறுவர்கள்) கல்வி கற்று வருகின்றனர். அந்த மாணவர்களில் சிலர் இன்று பல்கலைக்கழகங்களில் பல்வேறு துறைகளில் உயர்கல்வி பெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நம்மவர்கள் ஆரம்பத்தில் தமிழ்மொழியை சிறார்களிற்கு கற்பிக்கவேண்டும் என்ற ஆர்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதிருந்தனர். பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாதிருப்பதனால் ஏற்படும் விபரீத விளைவுகளையும் தெரியாதிருந்தனர். ஆனால் காலப்போக்கில் இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரித்தானியாவில் தமிழ் பாடசாலைகள் இருந்தாலும் ஆங்கில மொழிமூலமே தமிழ் கற்பிக்கப்பட்டது. பரதநாட்டியம் போன்ற நிகழ்வுகள் அங்கு நடைபெறும் பொழுது பிழை ஆங்கிலத்தில் எழுதி மாணவர்களைக் கொண்டு பாடல்களை மனனம் செய்ய வைத்து ஒப்பேற்றும் நிலையே இருந்தது. தமிழை உணர்வோடு கற்கின்ற வாய்ப்பற்றே இருந்தது. இக்கால கட்டத்தில் பிரான்சில் 1986ம் ஆண்டு சில தமிழ் ஆர்வலர்கள் ஒன்றிணைந்து சிறார்களுக்கு தமிழ் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கில் பரிஸ் தமிழர் கல்வி நிலையத்தை உருவாக்கினார்கள். இன்றுவரை இந்த கல்வி நிலையம் எவ்வித இடையூறுமின்றி சிறார்களுக்கு தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளை கற்பித்துக் கொண்டிருக்கின்றது. ஜேர்மனியில் 1991ல் தமிழாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1992ல் தமிழாலயங்களில் ஆண்டு விழா கொண்டாடப்பட்ட பொழுது 40 தமிழாலயங்கள் பங்குபற்றின. ஆனால் இன்று ஜேர்மனியில் தமிழாலயங்களின் எண்ணிக்கை 110க்கு மேலாக இருப்பது கண்டு மகிழ்ச்சியாக இருக்கின்றது. பிரான்சில் 99ல் தமிழ் சோலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று நாற்பதுக்கு மேற்பட்ட தமிழ்சோலைகள் இயங்குகின்றன. தமிழ் உணர்வோடு தமிழ்கற்பிக்கப்படுகின்றது. சுவிற்சலார்ந்திலும் தமிழ்க்கல்வி நிலையங்கள் உருவாக்கப்பட்டு தமிழ் போதிக்கப்படுகின்றது.

தமிழ் மொழி புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் மத்தியில் ஒரு தொடர்பு மொழியாக இருப்பது கண்கூடு. ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் வெவ்வேறு நாடுகளில் வசிக்கும்பொழுது அவர்களது பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழிகளிலேயே கல்வி கற்பார்கள். ஆனால் இந்த சகோதரர்கள் ஒரு வைபவத்தில் ஒன்றாக கூடும்பொழுது அவர்களது பிள்ளைகள் ஒருவரோடொருவர் உரையாடுவதற்கு ஒரு தொடர்புமொழி அவசியமாகின்றது. ஆகவே தமிழ்மொழி கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

ஐரோப்பிய ரீதியாக தமிழ் மொழிப் பாடத்திட்டம் வகுக்கப்பட்டு பொதுப்பரீட்சையும் நடாத்தப்படுகின்றன. எமது இளஞ் சந்ததியினர் மேலத்தேய நாகரீக மோகத்தினால் உந்தப்பட்டுத் தவறான பாதையில் செல்லாமல் தடுத்து அவர்களுக்கு எமது பண்பாட்டுக் கலைகளை பயிற்றுவிப்பது அவசியமாகும். இந்த வகையில் தமிழ்பாடசாலைகள் தோறும் தமிழ் மொழிக்கல்வி மாத்திரமின்றி அழகியற் கலைகளும் பயிற்றுவிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

**தமிழ்மொழியின் தேவை எவ்வாறுள்ளது:**

அந்தந்த நாட்டு மொழியைச் சரிவரப் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் தொடர்பு மொழியாகத் தமிழ் தேவைப்படுகின்றது.

தமிழர்கள் என்ற அடையாளத்தைக் காப்பதற்கு தமிழ்மொழி கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

புகலிட நாடுகளிலும் ஊரிலுள்ள உறவுகளுடனும் தொடர்புகளைப் பேண தமிழ்மொழி தேவைப்படுகின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் தாயகத்திற்கு திரும்பினால் அங்கேயே தொடர்ந்து வசிக்க நேரிட்டால் தமிழ்மொழி அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கும் உறுதுணையாகத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும்.

தமிழர்களின் தனித்துவமான கலை, கலாச்சாரப் பண்பாட்டுக் கட்டுமானத்திற்குள் பிள்ளைகளை வளர்க்க வேண்டுமாயின் அவர்களுக்கு ஏதாவதொரு அழகியற் கலையை ஊட்டுவது - பயிற்றுவிப்பது அவசியமாகும். குறிப்பாகப் பெண் பிள்ளைகளைப் பெற்றோர் இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். தம்பிள்ளைகளுக்கு ஏதாவதொரு அழகியற் கலையை அவர்களது விருப்புக்கேற்றவாறு அது வாய்ப்பாட்டாக இருக்கலாம். விளையாட்டாக இருக்கலாம், பரதமாக இருக்கலாம் கற்றுக் கொடுப்பது அவர்களை அந்நிய கலாச்சாரச் சிக்கலில் சீரழிவுகளில் இருந்து காப்பாற்ற உதவும். இன்று ஐரோப்பிய நாடுகளில் பரதக்கலையை பரவலாக பயிற்றுவிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனால் பரதநாட்டிய அரங்கேற்றம் என்ற வகையில் பெற்றோர்கள் இலட்சக்கணக்கில் செலவு செய்வது கவலைக்குரியதானது. வசதி வாய்ப்புள்ளவர் அதிக செலவில் அரங்கேற்றத்தைச் செய்தால் வசதியில்லாதவர்கள் கடன் பெற்று அப்படியான அரங்கேற்றம் செய்ய விளைகின்றனர். இதனால் கடன் பழுவில் சிக்கித் தவிக்கின்றனர். யாழ்ப்பாணத் தமிழர்களுக்கே உரித்தான அந்த ஒப்பீட்டுப் பொருளாதாரக் கொள்கையை புலம்பெயர்ந்த நாடுகளிலும் தொடர்ந்து கடைப்பிடிப்பதுதான் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. அதிக செலவில் அரங்கேற்றத்தைச் செய்த பிள்ளை அந்த கலையை மேலே தொடராமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இந்த நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். வாழையடி வாழையாய் தாம் கற்ற அந்தப் பரதக்கலையை வருங்கால சந்ததியினருக்கும் பயிற்றுவிக்க இவர்களது பயிற்சி தொடர வேண்டும்.

தமிழ் மொழி பயிற்றுவித்தலில் புதிய உத்திகளை மேற்கொள்ள வேண்டும். அந்தக் கால தமிழ் மொழி புகட்டல் வழிமுறையை விடுத்து நவீன வழிமுறையில், ஐரோப்பிய மொழிகள் எவ்வாறு ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றதோ, அந்த வகையில் பிள்ளைகள் விரும்பிப் படிக்கும் வண்ணமும் தமிழைக் கற்பிக்க வேண்டும். பிள்ளைகள் மீது தமிழ் மொழியை ஒரு சுமையாகத் திணித்தல் கூடாது . பொருளாதார நிலை, அகதி அந்தஸ்திலிருந்து பலரும் அந்தந்த நாடுகளில் பிரசா உரிமை பெற்றுக்கொள்வதும், வாடகை வீட்டை விடுத்து சொந்தமாக வீடு வாங்கிக் கொள்வதையும் காண்கின்றோம். ஒரு சிறிய தொடர் மாடிக்கட்டிடத்தில் பலர் கூட்டமாக வாழ வேண்டிய நிலை அன்றிருந்தது, பண வசதியில்லை. கடின உழைப்பினால் கிடைக்கும் கொஞ்சப் பணத்தையும், ஊரில் பட்ட கடனுக்கு, சகோதரிகளின் நல்வாழ்க்கைக்கு என்று அனுப்பிவைக்கவேண்டிய நிலையிருந்தது. பின்னர் படிப்படியாக முன்னேறி தனித்தனியாக தொடர்மாடிக்கட்டிடங்கள் வாடகைக்கு பெற்று குடும்பத்தினரையும் வரவழைத்து வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

இன்று இவர்களில் சிலர் வாழ்க்கையில் எதிர் நீச்சல் அடித்து முன்னேற்றம் கண்டு சொந்தமாக அடுக்குமாடிக்கட்டிடங்களையும், தனிவீடு வளவுகளையும் வாங்கி வசதியான வாழ்க்கைக்கு அடிகோலியுள்ளனர். ஆனால் அவ்வாறு வீடுகள் வாங்கியோரில் பலரும் வங்கிக் கடன் கட்டி முடிப்பதற்கு தம்மையொறுத்து கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. புகலிட நாடுகளில் மற்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலிருந்து வந்தோரை விட எம் ஈழத்தமிழர் கடின உழைப்பாளிகள், துரித முன்னேற்றம் கண்டு வருபவர்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளனர்.

**வழிபாடுகள்**

«கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்» என்பதை நினைத்துதானோ தமிழர் புகலிடம் தேடிய நாடுகளில் கோவில்களையும் உருவாக்கியுள்ளனர். ஊரில் நடப்பது போன்று இங்கும் கொடியேற்றம், தேர்த்திருவிழா, ஊர்வலம், கும்பாபிஷேகங்கள், அபிஷேகங்கள் யாவும் நடைபெறுகின்றன. மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வந்தவர்களிடத்து குறிப்பாக எம்மவர்கள் மத்தியிலும் பல்வேறு கிறிஸ்துவ சமயக் குழுக்கள் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றன. ஏக்கம் சுமந்து வந்த எம்மக்களை இலகுவில் கவர்ந்து விட இந்தக் குழுக்கள் முயல்கின்றன.

பாரம்பரிய கிறிஸ்தவ மதங்களை கடைப்பிடித்த எம்மக்கள் சிலரும் தொடாந்தும் இங்கு தமது வழிபாடுகளை தொடர்கின்றனர். அதற்கான தேவாலயங்களையும் கண்டுள்ளனர். எம்மண்ணிலிருந்து அம்மி குழவி தொட்டு பலதும் இறக்குமதி ஆகின்றன. நம் மண்ணில் கடைப்பிடிக்கப் பட்ட பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் இங்கும் தொடர்கின்றன. சமூக சீரழிவுக்கான பாதையில் வேற்றுமைகளை வளர்ப்பதுவும் சிலரிடத்துக் காணப்படுவது கவலைக்குரியது.

ஒற்றுமையையும் சமத்துவத்தையும் பேணி வளர்த்து அடுத்த சந்ததியினர் தமிழர் என்ற அடையாளத்தோடு புகலிட நாடுகளில் அறிவு ரீதியாக முன்னேற்றம் கண்ட சமூகத்தினராக வளர்ச்சி காண நாம் ஊக்குவிப்பாளர்களாக இருக்க வேண்டும். அதற்கான சகல துறைகளிலும் நாம் உழைத்திட வேண்டும்.

தமிழர்களுக்கென்று ஒரு தனிநாடு இல்லையென்ற அவல நிலையை எமது தாயகத்தின் விடுதலையின் மூலமாக போக்க முடியும் எனக் கருதப்படுகின்றது. தாயக மீட்பு பணியிலே புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் தங்களை மிக அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக் கொள்வதின் மூலமாக தமிழருக்கென்று ஒரு தனிநாடு பெறுவதுமாத்திரமின்றி தமிழ் மொழியையும் அடுத்த நூற்றாண்டுக்கு நகர்த்தி செல்பவர்களாகின்றனர். புலம் பெயர் நாடுகளில் நம்மவர் பொருளாதாரத்தில் மாத்திரமன்றி தொழில் நுட்பம் மற்றும் மருத்துவத்துறையிலும் முன்னேற்றம் கண்டிருப்பது கண்கூடு. இவர்கள் பெற்ற பொருட்செல்வமும் கல்விச்செல்வமும், எமது தாயகத்திற்கு பயன்படும் வகையில் செயல்படுவதற்கு பின் சந்ததியினருக்கு உணர்வு ஊட்டப்பட வேணடும். தந்தையர் நாடெனப்பேசப்படும் பொழுது அவர்கள் உள்ளத்தில் ஒரு சக்தி பிறக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவைகள் எல்லாம் சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமானால், எமது தாயகம் உலகில் உள்ள நாடுகளில் ஒரு உன்னதமாக கல்வி, பொருளாதார துறையில் பூரணத்துவம் பெற்ற நாடாக மிளிரக் கூடிய வாய்ப்பு உண்டாகும்.

**சி. காராளபிள்ளை**
**ஸ்தாபகர் காப்பாளர்**
**பாரீஸ் தமிழர் கல்வி நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாளர் திரு. விஜயகுமார் வரவு செலவு அறிக்கை வாசிக்கிறார்



திரு. கருணாரட்ணம் நன்றியுரை வழங்குகிறார்.





திருமதி. அனுஷா திலீப்குமார் நெறிப்படுத்திய நடனம், கோலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்ற சிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானோதயாவின் ஒளிபிறந்தது

அநு. வை. நாகராஜன் அவர்கள் 19ம் நூற்றாண்டின் முற்கூறில்



கட்டுவன் பாலர் ஞானோதயா சங்கம் ஆரம்பித்த யா/தெல்லிப்பழை ஞானோதயா வித்தியாலயத்தின் அதிபராக 1978 ம் ஆண்டு வரை கடமை ஆற்றியவர். இவர் நாடறிந்த கவியாளர், கவிஞர், எழுத்தாளர், சைவப்புலவர், இலக்கிய வித்தகர், இலக்கிய வேந்தர் போன்ற பட்டங்களும், விருதுகளும் பெற்று அரசாலும் தமிழ் இலக்கிய, சமய நிறுவனங்களாலும் கௌரவிக்கப்பட்டு சிறப்பிக்கப் பெற்றவர்.

கல்வித்துறையில் எமது பாடசாலையின் முதலாந்தர அதிபராகவும், கிளிநொச்சியில் கல்வி நிருவாக சேவை 2ம் தர (SLEAS - CLASS II) பதவியில் உதவிக் கல்விப்பணிப்பாளராகவும் கடமை புரிந்து 1994 ல் ஓய்வு பெற்ற கல்வியாளர்.

எமது கிராமத்து பாடசாலையின் சிற்பிகளுள் சிறப்பான இடத்தை வகித்த திரு. அநு. வை. நாகராஜன் அவர்களின் இப்பாடசாலை பதவிக் காலம் ஒரு பொற்காலம் எனக் கணிக்கப்படும். இவர் காலத்தில் பௌதீக வளம், கல்வி வளம், மாணவர் ஒழுங்காற்று நெறி என்பன செழுமையுற்று விளங்கின.

குறிப்பாக இவர் காலத்தில் கிராமத்தவரின் நன்கொடைகள் மூலம் விளையாட்டு மைதானத்திற்கான காணிகளும், அரசின் உதவிகளின் மேலாக ஊரவரின் உதவி, ஒத்துழைப்புகளால் நவீன அமைப்புடன் மண்டபத்தில் மேடை அரங்கு, குடிநீர் தாங்கி, நீர் மின்னினாக்கி (Electric motor) நீர்ப்பம்பி, (Milk White நிறுவினர், திருமிகு. கனகராசா அவர்களின் உபயம்) இணைப்பு அறிவியற்கூட அறை (உரிய தளபாட உபகரண வசதிகளுடன்) போன்ற முக்கிய தேவைகள் ஏற்படுத்தப் பெற்றன.

இவர் காலத்திலேயே வித்தியாலயத்தின் பொன்விழாவை ஒட்டிய வித்தியாலய கட்டிட வாயில் முகப்பு திராவிடக்கலை அம்ச அமைப்புடன் அமைக்கப்பெற்று பொன் விழா நினைவில் ஞானோதயம் எனும் விழா நினைவு மலருடன் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மேலும் இவர் காலத்தில்தான் பாடசாலையில் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆண்டு தோறும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டுத்துறையில் பெண்பிள்ளைகளுக்கான வலைப்பந்தாட்டம், ஆண் பிள்ளைகளுக்கான கால்பந்தாட்ட (கீழ்ப்பிரிவு) அணிகளும் ஏற்படுத்தப் பட்டு அயற் பாடசாலைப் போட்டிகளிலும், வட்டாரப் போட்டிகளிலும் எமது வித்தியாலயம் பங்கு பற்றி சிறப்பான இடத்தைப் பெற்றது. ஒரு சமயம் நெல்லியடி ம. ம. வித்தியாலய கீழ்ப்பிரிவு அணியுடன் எமது வித்தியாலயம் பங்கு பற்றி சிறப்பிடம் பெற்றது. இவற்றுடன் எமது வித்தியாலயம் கலை - இலக்கிய முயற்சிகளிலும் இவ்வட்டாரத்தில் மட்டுமன்றி மாகாண மட்டத்திலும் அகில இலங்கை மட்டத்திலும் பங்கு பற்றிச் சிறப்புகள் பல பெற்றது.

இவ்விதம் எமது வித்தியாலயம் இவ்வட்டாரத்தில் ஒரு மாதிரிப் பாடசாலையாகவும் மகாவித்தியாலய உயர்வும் பெற்றுக் கொள்ள இருந்த வேளையில்தான் சிங்கள அரசின் இராணுவ நெருக்கடியால் அழிவுகள் பலவற்றுக்குள்ளாகி 1987ல் வித்தியாலயம் உருக்குலைந்து இடம் பெயர்ந்து மீண்டும் 1990 இப்பாடசாலை உருக்குலைந்த நிலையில் புனருத்தாரணஞ் செய்து ஆரம்பித்த போதிலும் இப்பாடசாலை கிராமத்தின் மக்களும் பிள்ளைகளும் அடுத்த பாரிய இராணுவ நெருக்கடியால் இடம் பெயர்ந்து மீள முடியாத நிலையில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இருள் சூழ்ந்து இல்லாமல் போயிற்று.

கட்டுவன், வறுத்தலைவிளான், மயிலிட்டி தெற்கு கிராமங்களின் தொன்மையும், செழுமையும் கிணற்றில் மூழ்கிய கற்களாகியுள்ளது.

நன்றி

செயற்குழு உறுப்பினர். விழா பொறுப்பாளர்
சி.கணேசலிங்கம் (வெள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுமிகள் நடனம்



இசை நாடகத்தில் பங்கேற்ற சிறுவர்கள்
ஆக்கம்: திரு. ஞானம் பீரிஸ்
நெறிப்படுத்தியவர்:
திருமதி சாந்தினி சிவநேசமூர்த்தி



கோலாட்டத்தில் பங்கேற்ற சிறுமிகள்



பிரதம விருந்தினர் திரு. திருமதி. துரைராசா அவர்கள் பரிசுகள் வழங்குகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவசிரோமணி கணேசையர் பற்றிய சில குறிப்புக்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள புன்னாலைக் கட்டுவன் என்னும் கிராமத்தில் அந்தணர் குலத்தில் திரு. சின்னையருக்கும் சிம்மாளுக்கும் 15.04.1878ல் கணேசையர் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை தனது பெரிய தந்தையரான திரு. கதிர்காமையர் நிறுவிய சைவப்பாடசாலையிலே எட்டாம் வகுப்புவரை கல்வி கற்றார். பாடசாலை முடிந்த பின் பாடம்கேட்கும் மாணவர்கள் பெரும்பாலும் உயர் இலக்கிய இலக்கணங்களுக்கும், புராணங்களுக்குமே முதன்மை கொடுத்தனர். திரு. கதிர்காமையர் வித்தியாசாலை நிறுவிப் பணிபுரிந்தது மட்டுமல்லாமல் பெறாமகனான திரு. கணேசையருக்கு கரிசனையுடன் பாடங்கற்பித்து வந்தார். திரு. கதிர்காமையர் தமிழிலும், வடமொழியிலும் சிறந்த பாண்டித்துவமுடையவர். அக்காலம் குரு சிஷ்ய கல்விமுறை நிலவிவந்தகாலம்.

எட்டாம் வகுப்புவரை புன்னாலைக் கட்டுவனில் கல்வி கற்ற திரு. கணேசையர் பின்பு சங்க இலக்கியங்களில் அதிநுட்பமான ஆற்றலுடைய வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையிடம் (ஆறுமுக நாவலரின் மருமகன்) கல்வி கற்றார். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை இறந்த பின் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் சென்று தொல்காப்பியம், இரகுவம்சம், புராணங்கள் முதலிய நூல்களை கற்று பாண்டித்தியம் பெற்றார். அரசினர் பாடசாலைகளிலே கற்பித்தலுக்கு தேவையான ஆசிரிய தராதரப்பத்திரத்தை பெற்றிருந்த ஐயர் முதன்முதலாக வண்ணார்பண்ணையில் திரு. வேலுப்பிள்ளை என்பவரால் நிறுவப்பட்ட விவேகானந்த வித்தியாலய சாலையில் கல்வி கற்பித்தார். அதன் பின் நாவலர் காவியப்பாடசாலையில் சிறிது காலம் ஆசிரியராக கடமையாற்றினார். தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் முதலிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளிலும் ஆசிரியராக பணிபுரிந்தார். அக்காத்தில் தமது மாமனாராகிய திரு. யோகவன சாஷ்திரிகளின் புதல்வியான அன்னலக்குமியை திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் பின் தனது மாமனாரால் தையிட்டியில் நிறுவப்பட்ட சைவப்பள்ளிக் கூடத்தில் ஆசிரியராக கடமையாற்றினார்.

இதன் பின்பு நயினாதீவிலுள்ள சைவப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக 7 ஆண்டுகள் கடமை ஆற்றினார். 1921ம் ஆண்டு சுன்னாகத்தில் முகாந்திரம் தி.சதாசிவஐயர் பிராசீன பாடசாலை என்ற உயர்கல்விக்கழகமென்றை நிறுவினார். இப்பாடசாலையில் பாலபண்டிதர், பண்டிதர், பிரவேச பண்டிதர் வகுப்புகள் நடத்தப்பட்டன. இப்பாடசாலையில் திரு. கணேசையர் தலைமை ஆசிரியராக 1932 ம் ஆண்டுவரை பணிபுரிந்ததுடன் உயர் இலக்கண இலக்கியங்களையும் அவரே மாணவர்களுக்குக் கற்பித்தார். இக்கல்லூரியல் 15 வருட காலம் பணிபுரிந்துள்ளார். 1947 ம் ஆண்டு புங்குடு தீவு சித்தாந்த செம்மல் வைத்தியர் திரு. கணபதிப்பிள்ளையுடன் ஐயர் அவர்கள் சிதம்பரம் சென்றார். அக்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவராயிருந்த திரு. கணபதிப்பிள்ளையின் மகன் திரு. சிவராமலிங்கத்துடன் பல்கலைக்கழக நூல்நிலையத்திற்கு சென்று தமிழ் இலக்கண நூல்களை படித்துள்ளார்.

ஈழகேசரி நா. பொன்னையா அவர்கள் திரு. கணேசையரிடம் பிரவேச பண்டிதர் வகுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்றவர். திரு. நா. பொன்னையாவின் தமிழபிமானம் "கணேசையர் பதிப்பு" என்னும் தலைப்பில் ஐயரின் தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகள் வெளிவர உதவியது. ஐயர் அவர்களின் புலமையை வெளிக்கொணர்ந்தவர்களில் திரு. பொன்னையா முதன்மையானவர். 1931 ம் ஆண்டு ஐயர் அவர்களால் எழுதப்பட்ட குசேலர் சரிதத்தையும் 1939ல் ஐயரால் எழுதப்பட்ட ஈழநாட்டு தமிழ்ப் புலவர் சரிதத்தையும் பதிப்பித்து வெளியிட்டவர். 1952ம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் "வித்துவசிரோமணி" என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தது. 08.10.1938ல் ஐயருக்கு சஷ்டியப்த பூர்த்திவிழா நடைபெற்ற போது ஐயரின் மாணாக்கர்களும் நண்பர்களும் அபிமானிகளும் மட்டுமன்றி குறிப்பாக இவ்விழாவை நடத்தி ஐயருக்கு பொற்கிளி வழங்கி சிறப்பித்தமைக்கு காரணமாக இருந்தவர்களுள் ஈழகேசரி நா. பொன்னையா, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலைப்புலவர் க. நவரத்தினம், திரு. அம்பிகை பாகன் என அறியக் கூடியதகவுள்ளது. 01.4.1951 ம் ஆண்டு சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகத்தார் தமது நான்காவது ஆண்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்திய போது ஐயரை அழைத்து உலகப் புகழ் படைத்த ஆராய்ச்சி வல்லுனரான டாக்டர். கே.எஸ் கிருஷ்ணன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார் என வித்துவான் க.கி நடராஜன் குறிப்பிட்டுள்ளார். ஐயர் அவர்களின் 60 ம் ஆண்டும் பூர்த்தி விழாவை (சஷ்டியப்த பூர்த்திவிழா) திரு. பொன்னையா நடாத்தி தனிப்பெரும் சாதனை படைத்தவர் என திரு. கனகசெந்திநாதன் கூறியுள்ளார். ஐயருக்கு "புன்னை மாநகரவாதி" என்ற புனை பெயருமுண்டு. இது அவர் பிறந்த கிராமத்தின் மீது அவர் வைத்திருந்த பற்றினை காட்டுகிறது. இப்புனை பெயரில் பலருக்கு கண்டனக் கடிதங்களை எழுதியுள்ளார். தொல்காப்பியப்பாயிரம் முதற் சூத்திரம் ஆகிவற்றிற்கு அரசன் சண்முகனார் சண்முகவிருத்தி என்னும் பெயரில் எழுதிய விரித்தியுரையில் ஆகுபெயர் வேறு அன்மொழித்தொகை வேறு என்று நிறுவிய கொள்கையை எதிர்த்து அவை ஒன்றேயென தாம் எழுதிய செந்தமிழ் சஞ்சிகைக் கட்டுரையில் ஐயர் நிறுவியுள்ளார் என பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறியுள்ளார்.

வித்துவசிரோமணி கணேசையர் பல நூல்களை எழுதியுள்ளார். இலங்கை இலக்கிய வரலாற்றுக்கு இவருடைய "ஈழநாட்டுத் தமிழ் புலவர் சரிதம்" ஒரு முன்னோடி முயற்சியாகுமென கூறுகின்றனர். இலங்கைக் காவியமான இரகு வம்சத்துக்கு இவர் எழதிய உரை பாராட்டுக்குரியது. கம்பராமாயாணத்தை நவீன முறையில் பதிப்பிக்க விரும்புவோர் கணேசையர் "செந்தமிழ்" சஞ்சிகையில் தொடர்கட்டுரையாக எழுதி வந்த "இராமவதார பாடந்தரம்" என்பதைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் "கம்பன் காவியம்" என்ற நூலிலே எழுதியுள்ளார்.

திரு. கணேசையர் அவர்கள் தமிழ் இலக்கணத்துக்கு ஆற்றிய பணி ஈடிணையற்றது. ஐயர் அவர்கள் பெருந்தொகையான இலக்கணக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவருடைய தொல்காப்பிய பதிவுக்குள்ளே அவருடைய எட்டு முக்கியமான கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுளது. அவருடைய உரைவிளக்கத்தோடு ஈழகேசரி பொன்னையா அவர்களால் வெளியிடப்பட்ட தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் இக்காலத்தில் திரு கணேசையர் பதிப்பு என்று கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயரின் தொல்காப்பியப் பதிப்புகளில் எழுத்ததிகாரம் 1937ம் ஆண்டிலும், சொல்லதிகாரம் 1938ம் ஆண்டிலும், பொருளாதிகாரம் முதலாம் பகுதி 1948ம் ஆண்டும் இரண்டாம் பகுதி 1943ம் ஆண்டிலும் வெளிவந்ததாகக் கூறப்படுகிறது. 1960ம் ஆண்டு ஈழகேசரி பொன்னையா அவர்கள் திரு. கணேசையரின் நினைவுமலர் ஒன்றை வெளியட்டமை பாராட்டுக்குரியது. திரு. இ. சுந்தரராச சர்மா எழுதி வெளியிட்ட திரு. கணேசையர் பற்றி "ஞானசூரியன்" என்னும் நினைவு வெளியீடும் குறிப்பிடத்தக்கது. ஐயர் அவர்களின் சிரேஷ்ட மாணவர் இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய ஐயர் திரு. கணேசையர் பற்றி தமிழ் மன்றம் கல்வித்துறை செயற்திட்டக்குழு மகாஜனக் கல்லூரியால் 1977ல் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கழலக்கழகத்தின் தமிழ்த்துறை பேராசிரியர் திரு. எஸ். சிவலிங்கராஜா ஐயரின் வாழ்க்கையைப் பற்றி 1989ம் ஆண்டில் எழுதி வெளியிட்டார் என அறியக்கூடியதாக உள்ளது.

திரு. கணேசையர் அவர்களை வித்துவசிரோமணி பொன்னம்பலப் பிள்ளையிடமும் திரு. குமாரசுவாமிப் புலவரிடமும் படித்த மகாவித்துவான் என பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மதுரைத்தமிழ்ச் சங்க வெளியீடானா செந்தமிழ் சஞ்சிகையில் பல இலங்கைத் தமிழர்கள் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். அவர்களுள் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் காவலர் கோட்டம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, வித்துவசிரோமணி பிரமஸ்ரீ கணேசையர் முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஐயரின் கட்டுரைகளில் சங்க இலக்கியங்கள் கலந்திருப்பதை காணக்கூடியதாக இருந்ததாக கூறப்படுகிறது. கவியின்பம் என்ற தலைப்பில் செந்தமிழ் என்ற சஞ்சிகையில் ஐயர் அவர்கள் பல இலக்கியக் கட்டுரைகள் தொடர்ச்சியாக எழுதியுள்ளார்.

ஐயர் அவர்களால் எழுதப்பட்ட "இரகுவம்ச புத்துரை" நூலுக்கு திரு. குமாரசாமிப்புலவர் வழங்கிய சிறப்புப்பாயிரத்தில் ஐயர் அவர்களை பின்வருமாறு புகழ்ந்து பாடியுள்ளார்.

"காசிபகோந்திரமுடையோன் புன்னை
நகர்ச்சின்னையர் காதன் மைந்தன்
தேசிகன் வித்துவசூடாமணி பொன்னம்பலப்
பெயர் கொள் செம்மல் பாங்கே
பேசரிய இலக்கியமு மிலக்கணமும்
பிறநூலும்
பெரிது கற்றோன்
பூசுரர் கோன் கணேசனெனும்
பெயருடையோன் கவிபாடும்
புலமிக்கோனே"

ஐயர் அவர்கள் திரு.
குமாரசாமிப்புலவரைப் பற்றி பின் வருமாறு பாடியுள்ளார்

"ஆறுமுக நாவலனும் ஆற்றுத்தமிழ்ச்
சைவநெறி
வீறுகொள வைத்தான் வியனுலகில் -
ஏறுபுகழ்
சுன்னைக் குமாரசுவாமி தருசுகுணன்
புன்னைக் கணேசன் புகல்"

ஐயர் அவர்கள் தமது இறுதிக் காலங்களில் தவமுனி போல ஆச்சிரம வாழ்வை மேற்கொண்டு "துறவு" வாழ்வை வாழ்ந்தவர். ஐயர் தவ வாழ்வை மேற்கொண்டபோதும் மாணவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டே இருந்தனர். அம்மாணவர்களுக்கு வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தை சூழவுள்ள மரங்களுக்கு கீழ் இருந்தே கல்வி கற்பித்தார் என இலக்கணவித்தகர் பண்டிதர் திரு. நமசிவாய ஐயர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர் அவர்கள் அகநானூறு நூலின் முதல் நூறு செய்யுள்களுக்கு எழுதிய உரை 1956 ம், 1957 ம் ஆண்டுகாலப்பதியில் ஈழகேசரியில் தொடர்ச்சியாக வந்தது குறிப்பிடத்தக்கது. ஐயர் அவர்கள் இரகுவம்சத்துக்கு எழுதிய உரை திரு. குமாரசுவாமிபுலவரின் மேற்பார்வையுடனும் திருத்தத்துடமே வெளிவந்த தென்பதை ஐயர் அந்நூலின் முகவுரையில் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு உரையாசிரியருக்கு இருக்க வேண்டிய பன்னூற் பயிற்சி, இலக்கணத்தெளிவு முதலியன திரு. கணேசையரிடம் சிறப்பாக இருந்ததென்பதை இவ்வுரைப் பகுதிகள் தெளிவுபடுத்துகின்றது.

ஐயர் அவர்கள் உரை எழுதிய நூல்களுள்! மகாபாரதம் சூது போர்ச்சுருக்கம் விதந்து குறிப்பிடத்தக்கது. மகாபாரதத்தின் சூது போர்ச்சுருக்கம் ஒரு சுவையான பகுதி. கற்றற்கு விருப்புடைய மாணவர்க்கும் கவிதையில் விருப்பமுடைய ஆர்வலர்க்கும் இந்த உரை பயனுள்ளதாகவுள்ளது. மகாபாரத சூதுபோர்ச் சுருக்க உரையும், இரகுவம்ச உரையும் ஐயர் பொன்னம்பல பிள்ளையின் உரைமரபில் வந்தவர் என்பதை தெளிவுபடுத்துகின்றது. ஐயர் அவர்களின் மொழியாழுகைத்திறனை உரைநூல்களிலே காண்பதை விட அவர் வசன நடையிலே எழுதிய குமாரசுவாமிப்புலவர் சரிதம், ஈழநாட்டுத்தமிழ்ப் புலவர் சரிதம், குசேலர் சரிதம் முதலிய நூல்களிலே காணமுடிகிறது. குசேலரின் கதையை சிறுவயதினர்க்காக எழுதப்பட்டதாக தோன்றுகிறது. குசேலர் சரிதத்தை பதினெட்டு பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு உபபிரிவுக்கும் பொருத்தமான தலையங்கங்கள் இட்டுள்ளார். ஐயர் அவர்களின் காலத்தில் செய்யுள் இயற்றும் திறன் படைத்தவர்களே தமிழறிஞர்கள் என கருதப்பட்டனர்.

ஐயரின் செய்யுள்களுள் பெரும்பாலானவை சமயச் சார்புடையவை. திருச்செல்வச் சந்நிதி நான்மணிமாலை, புன்னமும்மணிமாலை, வறுத்தலைவிளான் மருதடிவிநாயகர் பிரபந்தம், வறுத்தலைவிளான் பிடாரத்தனை கண்ணகை அம்மன் ஊஞ்சல், மேலைக்கரம் பொன் சண்முகநாதன் திருவரட்டை மணிமாலை முதலியன ஐயரின் செய்யுள் நூல்களாகும்.

ஐயரின் மனைவியார் இறந்த பின் அவரின் ஞாபகார்த்தமாக ஒரு காணிவாங்கி அதில் ஒரு கிணறு வெட்டிவித்து அதற்கு அன்னலட்சுமி கூபமென பெயரிட்டு வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அதனை தருமசாதனம் பண்ணியுள்ளார். ஐயர் தனது ஆசிரியர்கள், நண்பர்கள், மாணவர்கள், தமிழறிஞர்கள், முதலியோருக்கு இரங்கிப்பாடல்கள் பாடியுள்ளார். ஈழகேசரி பொன்னையாவின் புத்திரிக்கு திருமண வாழ்த்துப் பாடியுள்ளார்.

பண்டிதராகவும், மகாவித்துவானாகவும், வித்துசிரோமணியாகவும், உயர்ந்து விளங்கிய பிரமஸ்ரீ கணேசையர் பொதுமக்களுடன் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருந்தார். இதனால் மக்கள் இவரை சாத்திரியார் என்றும் சந்நியாசியார் எனவும் அழைப்பர். நல்லநாள் பார்த்தல், வீடு, கிணறு, முதலியவற்றிற்கு நிலம் வகுத்தல் நினைத்தகாரியம் கேட்டல் போன்றவற்றிற்கு ஐயரை பொதுமக்கள் நாடியுள்ளனர். தனது சொத்து அனைத்தையும் தெய்வத்திருப்பணிக்கே செலவு செய்துள்ளார்.

ஐயர் தனது 81 வயதில் (1958) இறைவனடி சேர்ந்தார்.

**சித்தப்பா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயலின் கச்சேரியில் பங்கேற்றவர்கள்
நெறிப்படுத்தியவர்: திருமதி. மங்கையக்கரசி சிவானந்தன்





நகைச்சுவை நாடகத்தில் பங்கேற்றவர்கள்
நெறிப்படுத்தியவர்: சிவபாதம், சண்முகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டார் கலையில் கட்டுவனூரின் பதிவுகள்

இலக்கிய வித்தகர், சைவப் புலவர் அநு. வை. நாகராஜன்
(ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

தமிழீழத்தின் சிரசென விளங்கும் யாழ்ப்பாண நகருக்கு வடபால் அமைந்த காங்கேசந்துறைப் பட்டினத்திற்கு தென் கிழக்காயுள்ள தெல்லிப்பழையூர், வலிகாமம் வடக்கில் சகல வளங்களும் மலிந்த பாரம்பரிய பூமியாகத் திகழ்கிறது. கடல் வளத்தோடு, செம்மண் செறிந்து, ஆழ்கிணற்று நீர் வளத்துடன் எங்கும் பயிர் நெருங்கி வலிகாமத்தின் தென் கிழக்காயுள்ள கிராமங்களுள் கட்டுவன் எனுந் தொல் கிராமமும் ஒன்றாகும்.

பண்டு தொட்டு பல்வளமும் பாரம்பரியச் செழுமையும் கொண்டு விளங்கும் இவ்விவசாயக் கிராமத்தின்கண் நற்குடி மாந்தர், சுற்றஞ் சூழ உறவுகள் பேணி வாழ்கின்றனர்.

மாவிட்டபுரம், மயிலிட்டி, வயாவிளான், ஏழாலை, சுன்னாகம், அளவெட்டி, மல்லாகம் எனும் பல்வளங்கொண்ட கிராமங்களைச் சூழவுள்ள கட்டுவன் கிராமம், எல்லாக் கிராமங்களைப் போன்று பயிர்வளமும், கிணற்று நீர் வளமுஞ் செறிந்து விளங்குகின்றது. அத்துடன் கல்வி, வளம், கலைவளம் பரம்பரைச் சைவ சமய ஆசாரங் கொண்டு ஆன்மீக நலங் கொண்டு தொல்குடி மாந்தரைக் கொண்டதே கட்டுவன் கிராமம்.

கட்டுவன் ஒரு குக்கிராமம். ஆயினும் கற்றோரும் மற்றோரும் செறிந்து பழம்மரபு பேணுங் கலைஞரும், சுவைஞ்ஞரும் மரபு வழுவாது பண்டு தொட்டு கவின் கலைகளைக் கண்ணுங் கருத்துமாகக் காக்கும் பேரறிவாளர் செறிந்து வாழும் கிராமம்.

இதன் பின்னணியிலேயே கட்டுவனூர் நாட்டார் கலைகளில் மிகவுந் தனித்துவங் கொண்டு வசந்தன் ஆட்டங்கலை விளங்குகின்றது. இக்கலைகள் மக்களின் ஐதீகங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் என்பனவற்றுடன் இணைந்திருக்கின்றது. இந்நிலையில் இவர்களது வாழ்வியல், பொழுது போக்குகள் யாவும் ஆடல், பாடல் போன்ற களியாட்டங்களுடன் பின்னிப் பிணைந்து இருக்கின்றன. இவர் வாழ்வியல், நாட்டார் பண்பாட்டியற்றுறைக் கோலங்களில் ஆராயப் பெறுகின்றன. இக்கருத்தியலை (Concepts) பேராசிரியர் கா. கைலாசபதி போன்ற அறிஞர் மிகவும் ஆழமாக விரித்துரை செய்கின்றார். இவரின் கூற்றுப்படி இப்பிரதேசத்து மக்களது வாழ்வியல் சமய நம்பிக்கைகளோடும் சடங்கு சம்பிரதாயங்களோடும் இணைந்து விளங்குவைதக் காணலாம்.

அந்த வகையில் கட்டுவனூரின் பழம்பெருமை கொண்ட வசந்தன் கூத்து அல்லது வசந்தன் நாடகம் மிகவும் சிறப்பு மிக்க அவைக்காற்றுக் கலைகளில் (Preforming Arts) ஒன்றாகத் தொல்கலை வடிவமாகும். இது நாடக இயல்புடையது ஆடல்பாடலுங் கொண்டு அங்க அசைவுக்கும், இசைவுக்கும் உரியதாகக் கொள்ளப் பெறும். இஃது உள்ளத்திற்கும் உடலுக்கும் ஒருங்கே உவகையும் வலுவும் தருவதாகும்.

இவ்வசந்தன் நிகழ்வு கதை தழுவாது பாடலின் பொருளுக்கு ஏற்ப கைகாட்டி முகங்காட்டி வல்லபஞ் செய்யும் அபிநயந்தரும் ஆட்டமாகும். இதில் பண்டைய கூத்து வகையான வசைக்கூத்து, வெறிக்கூத்து என்பவற்றின் சாயலைத் தருவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநோதக்கூத்தின் சாயலையுந் தரும். இக்கூத்தில், நாடக இலக்கணம் இல்லையாதலால் பொதுவாக நாடகத்துக்குரிய தொடக்கம் - முரண்பாடு - வளர்ச்சி என்பனவும் இல்லை. எனினும் அதன் பாடலுக்குரிய சந்தங்கள் யாவும் பாடிப்பாடி கோல் கொண்டு அடித்துக் கோலாட்டமாக ஆடுங் கூத்தாகிறது. இதன் பொருட்டே இதனை வசந்தன் கோலாட்டம் என வழங்கப் பெறுகின்றது.

இது பழந்தமிழ் மரபில் வரிப்பாடல் வகையைச் சார்ந்து இருப்பதால் இப்பா «வசந்தன் வரிப்பா» எனவும் கூறுவர். இவ்வரிப்பா தெய்வங் குறித்தும் மக்கள் சுட்டியும் அமையும். ஆதலின் தெய்வங் குறித்து வரும் வசந்தன் பாடல்களில் «தேவி வசந்தன்», «வீரபத்திரர் வசந்தன்», «அம்மன் வசந்தன்» எனப் பல வசந்தன்களும் உண்டு. இவ்வற்றுள் மக்கள் குறித்துப் பாடல்கள் இருப்பதால் அவை குறிப்பிட்ட தலைவர் பெயரில் «நரேந்திர சிங்கன் பள்ளு», «கனகராஜன் பள்ளு» «தம்பாப்பிள்ளை பள்ளு» போன்ற பள்ளு வசந்தன்கள் அந்நாளில் வந்துள்ளன. வசந்தன் நாடகம் அல்லது கூத்து, ஈழத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் சிறப்பாக ஆடப்பெறுகிறது. இவ்வகையான வசந்தன் பாடல்களில் 32 வகையான இராகங்கள் இழையோடி, தனித்தனியாகவும் இணைந்தும் இருப்பதாக இசை ஆய்வாளர் கூறுவர். அதன் அடிப்படையில் வசந்தன் நாடகம் அல்லது கூத்தில் 63 வகையான வசந்தன்கள் இருப்பதாக அறிஞரும், ஆய்வாளருமான உயர்திரு தி. சதாசிவ ஐயர் என்பவர் கூறுகிறார்.

தமிழகத்தில் இவ்வசந்தன் கூத்தில் ஆண்-பெண் இருபாலரும் பொதுவாக சேர்ந்து நின்று ஆடுவர். ஆயினும் ஈழத்தில் ஆண்களுக்கே உரிய ஓர் ஆட்டமாக இதனை ஆடுவர். இ∴து இந்துக் கடவுளரிடம் வான் மழை வேண்டி நோன்பிருந்து வேண்டுதல் செய்யும் நிலையில் ஆடும் கலைவடிவமாக மிகவும் பயபக்தி சிரத்தையோடு ஆடப் பெறும். சமயம் சார்ந்ததாயினும், இது பொழுது போக்குக் கலையாகக் கொண்டு தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் ஆடி வருகின்றனர்.

கட்டுவனூர் வசந்தன், வலிகாமம் வடக்கு, கட்டுவன் அலவத்தைப் பகுதியில் எழுந்தருளி இருக்கும் வீரபத்திர சுவாமியைத் தலைவராகக் கொண்டு புனையப் பெற்ற ஆடல் பாடல் கொண்ட கிராமிய நாடகப் பனுவலே இ∴தாகும். இக்கலைப் பாவவடிவத்தை, இம்மண்ணின் புலவரான விசுவப்புலவர் எனும் மரபு வழியான வரகவிப் புலவரால் இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் யாத்ததாகக் கூறப்பெறுகிறது. இவர் இலங்கையை ஆட்சி செய்த அந்நியர்களுள் ஒருவரான ஒல்லாந்தர்(டச்சுக்காரர்) காலத்தவர் எனக் கருதப் பெறுகிறார். விசுவப் புலவர், முறையாகத் தமிழ் கற்றவர் என்பதை அவர் பாக்கள் இலக்கண வரம்புகளுக்குள் கவிச் சுவை, இலக்கண - இலக்கியச் சுவை கொண்டு நாட்டார் மரபுகளைப் பேணும் நல்ல கவிஞர் என்பதற்கு அவரது இப்பாடல் ஆக்கமே சான்றாக அமைகிறது. 300 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டுவனூரில் இத்தகைய அறிவுச் செம்மல்கள் வாழ்ந்தனர் என நினைவு கூர்தலில் யாம் பெரு மகிழ்வு கொண்டு பெருமிதங் கொள்கிறோம். இவர் கவிதைகளில் மரபு வழியான இலக்கண அமைதி நிறையக் காண்கிறோம். இவரது வசந்தன் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொடர்நிலைப் பா வடிவமாகவும் முழுமையாகவும் இருக்கின்றன.

இதில் ஒரு நாடகப்பாணி இருப்பதாற் போலும் இதனை இங்குள்ளோர் வசந்தன் நாடகம் என்று தொன்று தொட்டு போற்றி வருகின்றனர். மழை பெய்தல், நெல் விதைத்தல், காவல் காத்தல், அறுவடை செய்தல் அதனை வீட்டுக்கு எடுத்து வருதல் போன்ற நிகழ்வுகள் தொடர் சங்கிலி போல் நாடக அமைவில் ஒழுங்குற இங்கு இருப்பதைக் காணலாம்.

கட்டுவனூர் வீரபத்திரர் வசந்தன் ஒரு விவசாயக் காவியம் எனக் கொள்ளலாம். காவியத்திற்குரிய இலக்கணம் இதிற் காண முடியாததாயினும் விவசாய மண்ணின் வாசனை கமழுங் காவியம் எனலாம். முக்கியமாக இந்நாடகம் பிறந்த சூழல், விவசாயிகள் நாளும் பொழுதும் உண்டு, உடுத்து, உறங்கி வாழும் நெல் வயல்களும் கழனிகளும் சூழ்ந்த நிலமாக, அதாவது மருத நிலத்தைச் சார்ந்ததாக உள்ளது.

இற்றைக்கு 300 - 400 ஆண்டுகளுக்கு முன்னர், கட்டுவனூர் நெற்செய்கை செறிந்த நிலமாக இருந்துள்ளது என்பதற்குப் பல அக-புறச் சான்றுகள் உள்ளன. கிணற்று நீர் வளஞ் சுருங்கி நெற்செய்கை வளங்குன்றி, சனப் பெருக்கமும் பெருகி இருந்த போதிலும், முன்னாளில் மாதம் மும்மாரி பொழிய மக்கள் விவசாயிகளாகவே இருந்தனர். இதற்கு எடுத்துக் காட்டாக - கட்டுவனூர் வசந்தன் ஆட்டமும் எழுத்துப் பனுவலும் உள்ளன. குறிப்பாக இவ்வசந்தனில் வரும் பள்ளன்(விவசாயி) வருகையைக் கூறும் முகமாக «வீரபத்திர சுவாமி பண்ணை வயற் பள்ளன் வந்தானே» என்றும் மழை பெய்யும் பாடற் பகுதியில் «அள்ளம் தன்னில் நாற்றை நடத் தொடங்கி» என்றும் வேளாண்மைத் தொழிலின் நெற்செய்கையை விரித்துக் கூறுவதில் இருந்து இந்நிலம் விவசாயத்துக்குப் பெயர் பெற்ற ஒரு நன்னிலம் என்பதைச் சுட்டி நிற்கிறது.

ஈழத்தின் வடபுலம், பொதுவாக வானம் பார்த்த பூமியாக மழை குறைந்த நிலமாக இருக்கிறது. மக்கள் வான் மழையை நம்பி ஏங்கி வாழ்வர். இங்கு வாவிகளோ, குளங்களோ, நதிகளோ கிடையாது. இயற்கை அல்லது செயற்கை நீரோடைகளும் கிடையாது. ஆண்டில் ஓரிரு மாதங்களில் மட்டும் பெய்யும் கானல் மழையையே நம்பி வாழும் பிரதேசமாக இருக்கும். ஆதலால் எங்கும் வரண்டே காணப்படும் பிரதேசத்தில் நோயும் நொடியும் பஞ்சமும் அடிக்கடி மக்களைக் காலத்துக்குக் காலம் வாட்டும். விவசாயம் படுத்துப் பாழ்படும். இப்பொல்லா நிலையில் மக்கள் அல்லற்படுவர். அந்நிலையில் தெய்வத்தை வேண்டி வழிபாடுகளும் பலியுமிட்டு வேண்டுவர். கொடும்பாவி கட்டி இழுத்து மழைக்காக வேண்டுவர்.

அவ்வேளையிலேயே கட்டுவனூர் வீரபத்திர சுவாமியை வேண்டி வசந்தன் பாடி ஆடி வேண்டுதல் செய்வர். பொதுவாக கும்மிப் பாடல்களில்

''தன்னான நாதினம் தன்னான தன
தன்னான நாதினம் தன்னானே''

என வரும் தருக்கள் இங்கு கவிஞரின் வசந்தனில் கோலாட்ட நடைக்கேற்ப,

''தின தந்தினா தின தந்தினா
தின தந்தினா தினா
தின்னாதி நானந்தனா
தின தந்தினா தின்னா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வரும். இத்தருக்கள் விதம் விதமான நடையில் துரித நடையிலும் மந்த நடையிலும் வரும்.

இவ்வசந்தனில் முதலச்சு, இரண்டாம் அச்சு என அங்கங்களுண்டு. ஒவ்வொரு அச்சிலும் வரும் பாத்திரங்களுக்கும் சம்பவங்களுக்கும் ஏற்ப விருத்தம் தரு எனவும் இருக்கும். ஓரிடத்தில் (குயில் கூவல்) மட்டும் விருத்தத்துக்குப் பதிலாக கொச்சகம், தரு என வரும்.

இப்பா வகைகள் நாட்டார் பா வகையில் சேரத் தக்கவை அல்ல என ஆய்வாளர் கூறுவர். ஆயினும் கவி நயம், மொழி நயம், இலக்கண-இலக்கிய நயம் செறிந்த ஏட்டிலக்கியத்துள் இஃதமைகிறது. இதில் வருந் தருக்கள் கொண்டு இதனை நாட்டார் இலக்கியத்துள் அடக்கி சந்தவோசை, சுருதி, இலயம் நிறைந்த கிராமிய பாடல்களைச் சுவைக்கலாம். இவை இவ்விதம் இருக்க, அதன் ஆட்டத்தில் கிராமிய மணம் இரம்மியமாகக் கமழ்வதை யாரும் மறுப்பதற்கு இல்லை.

இவ்வசந்தன் ஆட்டம் தனித்துவமானது. பாரம்பரியச் செழுமை மிக்கது. இதற்கு மத்தளம், உடுக்கு போன்ற கிராமியப் பக்க வாத்தியங்கள் பின்னணி இசையாக வழங்கப்பெறும். இவ்வாட்டத்தில் இடம்பெறும் நிலைகள் யாவும் அபாரமானவை. இஃதொரு குழு ஆட்டம் ஆதலால் தொகையான இளஞ்சிறார்(ஆண்) முதற்கொண்டு கட்டிளங் காளையரும் பழுத்த முதிர்ந்த ஆடவரும் இதில் பங்கு கொண்டு ஆடுவர். ஆகக் குறைந்தது 12 அல்லது 18 ஆட்டக்காரர் ஆடுவர். அவர்கள் கிராமியப் பாணியில் கொடுக்குக் கட்டி - வெண்ணீறு தரித்து, சந்தன குங்கும திலகமிட்டுச் சிவக்கோலமாய் நின்று காட்சி தருவர்.

இதற்கென மேடை அரங்கு அவசியமில்லை. கோயில் முன்றில் அல்லது வெட்டை வெளியில் பார்வையாளர் வட்டக் களரியாகச் சுற்றி நின்று இதனைக் கண்டு களிப்பர். இஃதே இவ்வாட்டத்தின் சிறப்பம்சமாக அமைகிறது.

மக்கள் தமது குறையைப் போக்கிக் கொள்ள, மழையை வேண்டி வீரபத்திரர் சுவாமியை பக்தி சிரத்தையோடு பாடி ஆடிட மழை அமிர்த வாரியெனப் பொழியும். இஃது அந்நாளில் உண்மைச் சம்பவமாக நிகழ, மக்களும் அதனை வீரபத்திரரின் திருவருளாகக் கொண்டனர். இதனையே கட்டுவனூர் வசந்தன் ஆட்டமும் பாடலும் எமக்கு நிதர்சனமாகக் காட்டி நிற்கிறது. இதற்கான அகச் சான்றுகள் இப்பாடலில்

மாதமெல்லாம் மும்மாரி
மழைபொழிய நெல்விளைய
பாதக நோய் பஞ்சமறப்
பாடியூஞ்சல் ஆடுவோமே

என்றும்

நெற்பயிரும் மற்றுமுள்ள
நீணிலத்தின் பயிர்களெல்லாம்
சற்றுமுடல் வாடாமல்
தழைவு தினம் கோடாமல்
மழைவேண்டினமே.....

என வரும் பாடல் வரிகள் இவ்வசந்தனிற் காணக்கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய உயரிய ஆடலும் பாடலும் கட்டுவனூரின் மரபு பேணும் அருங்கலையாக ஆற்றுகைக் கலையாக ஆவணப்படுத்தப் பெறுகிறது.

இக்கலையை எமது மூதாதையர் நெடுங்காலமாகப் போற்றினர். இன்றும் வழிவழியாகப் போற்றி வருகின்றனர்.

விசுவப் புலவர் தந்த வசந்தன் பனுவலையும் ஆடலையும் முன்னாளில் தென்மயிலை இ. கதிரித்தம்பி, ஓதுவார்மூர்த்தி, வி.ரி.வி. சுப்பிரமணியம், விதானையார் ந. நாகலிங்கம் போன்ற மூத்தோரும் வேறு பலரும் வழி வழியாக நின்று வழி நடத்தினர். இதிற் குறிப்பாக விதானையார் திரு. நாகலிங்கம் இவ்வசந்தனின் அண்ணாவியாராக நின்றதோடு இவ்வாடலை அயற் கிராமங்களிலும் நகரங்களிலும், கிராமிய நிகழ்வோடு நடத்தியதோடு பரப்புரை செய்யும் முகமாக கொழும்பிலும் ஒரு சமயம் அரச செலவில் இங்கிலாந்தரசி மாண்பு தங்கிய எலிசபெத் மகாராணி அவர்கள் முன்னிலையில்(1950 களில்) நடத்தியும், இலங்கை வானொலி நிகழ்வொன்றில் நாட்டார் ஆடல் பாடல் நிகழ்வு எனக் கட்டுவனூரின் தொல் பெருமையை நிலை நாட்டினார். இ∴தோர் அன்றைய வரலாற்றுப் பதிவாகும்.

1970 வரை இக்கிராமத்தின் நிகழ்வாக திருவாளர்கள் குருசாமி, ஆ. நாகலிங்கம், த. செவ்வராசா, ஆ.வ. பாலசுப்பிரமணியம், ஆ.வ. சுந்தரலிங்கம், கு. சுகுமார் போன்ற கலை ஆர்வலர் பலர் இவ்வசந்தன் நிகழ்வைக் காலத்துக்குக் காலம் வழிநடத்தி வந்தனர். இவர்களுள் மூத்த கலைஞரான திரு. குருசாமி இலேஞ்சி ஆட்டம் எனும் நிகழ்வையும் இவ்வசந்தன் ஆட்டத்துடன் இணைத்து இளைஞரை வழிநடத்தினார் என்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாடல் பாடல்களை மரபு வழி குலையாது புத்திசைக் கருவிகளான ஆர்மோனியம், தபேலா, வயலின் போன்றவற்றின் பின்னணியில் எம்மூரவரும் நாடறிந்த கலைஞருமான அமரர் எஸ். கே. பரராஜசிங்கம் அவர்களின் இயக்கத்தில் சங்கீதபூஷணம் குலசீலநாதன், திருமதி. வனஜா சீனிவாசன் போன்றோர் பாடிய ஒலிப்பேழை ஒன்றினை இலங்கை வானொலி நிலையத்தாரால் வெளியிடப் பெற்றுப் பதிவாகி உள்ளது.

இக்கட்டுரைக்கு உசாத் துணையாக உதவியவை:

''கலைமுகம்'' காலாண்டுக் கலை இதழ் (1993) - ''நாட்டார் கலையில் வசந்தன் ஆட்டமும் வேட்டைக் கூத்தும்'' எனும் கட்டுரை - திரு. அ.நு.வை.நா. எழுதியது.
இக்கட்டுரை அ.நு.வை.நா.வின் ''கருத்தும் எழுத்தும்'' (2004) எனும் நூலிலும் மறுபிரசுரமானது.
செல்வி கௌசலா சிதம்பரநாதன் (தற்போது திருமதி. இரவிசங்கர்) எழுதிய ''வசந்த காலத்தின் வசந்தன்'' எனும் கட்டுரை(1998)

**42/4, சீகல் மாண்ஷன்**
**55வது ஒழுங்கை, கொழும்பு - 06**
**25.05.2006**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றவர்கள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் கலாச்சாரமும்



உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளை எல்லாம் கிளர்ந்து எழச் செய்யும் மாபெரும் புரட்சியினையே கலைகள் என்கிறோம். கலைகளின் பரிணாமப் பிரதிபலிப்பே கலாச்சாரம் எனலாம். விந்தையான விஞ்ஞான உலகில் வியத்தகு முன்னேற்றங்களோடு வெற்றிகரமாக வீறு நடை போட்டு நிற்கின்றது எங்கள் கலையும் எங்கள் கலாச்சாரமுமே.

தூங்கிக் கிடந்த உலகனைத்தையும் தட்டி எழுப்பி விழித்தெழச் செய்து நிற்கின்றது. கலையின் வளர்ச்சி இன்று எந்த மதமானாலும் சரி, எந்த இனமானாலும் சரி, எந்த மனிதனானாலும் சரி, ஏன் எங்கும் எதிலும் அடையாளச் சின்னமாய் திகழ வைப்பது கலையும் கலாச்சாரமுமே.

இருள் வெளியில் மண்டியிட்டு நின்ற உலகத்தையும் இன்று வெளிச்சத்துக்கு விரைந்து வரச்செய்து விடி வெள்ளியாய் வீறு கொண்டு துளிரச் செய்து நிற்கும் கலை உலகையும் கலாச்சாரத்தையும் எப்படித்தான் வார்த்தைகளால் வடிந்துரைப்பதோ! கலையை ஒரு பொழுதுபோக்கு சாதனமாகவும் மக்களின் மேம்பாட்டிற்கான கல்விச் சாதனமாகவும் பயன் படுத்துகிறார்கள்.

ஏன் இன்று அரசியல் ஆட்சி அதிகாரத்தின் ஏணிப்படியாக அமைத்து கலை இலக்கியங்களின் பிரதிபலிப்பென்றே கூற வேண்டும். கலையும் கலாச்சாரமும் இன்றேல் இனமும் இனத்தின் பண்பாடும் இல்லை என்ற அளவுக்கு கலை வளர்ச்சி அடைந்து விட்டது. கலையை இரசிக்க தெரியாதவன் மனிதனே இல்லை என்ற அளவுக்கு கலை வளர்ந்து விட்டது.

"வெற்றிச் சங்கூதிப்பாடி கலைவீரரைப் போற்றி நிற்போம்
துன்பமே எந்த நாளும் இனியெமக்கில்லை இல்லை

மனிதன் தோன்றிய நாள் தொடக்கம் இன்றுவரை மக்கள் மனதில் மாசுகளை நீக்கி ஒருமை உணர்வை வளர்க்கவல்ல நவநாகரீக உலகிலேயே சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு மனிதகுலம் நாகரீகம் என்னும் நீண்டபாதையிலே வீறுநடையுடன் முன்னேற காரணம் கலையும் கலாச்சாரமுமே என்றால் மிகையாகாது.

இறந்தும் இறவாப் புகழ் பெற்ற கலைஞர்களை மாறிவரும் உலக மாற்றத்துக்கு ஏற்ப கலைகள் மாற்றி வருகின்றன. மனித சமுதாயம் மேம்பாடு அடைய கலையும் கலாச்சாரமுமே ஆணிவேர் கலை அழிந்தால் மனித இனமே அழிந்துவிடும் என்ற அளவுக்கு கலை தனித்துவம் வாய்ந்ததாய் திகழ்கின்றது.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு கலாச்சாரத்தை பிரதிபலித்து நிற்கின்றன. சினிமாக்கலை நடிப்பாற்றலை வெளிப்படுத்துவதன் ஊடாக மக்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் வளர்ச்சி பெற்று வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி மக்களின் உயர்வான மேம்பாட்டுத்தன்மையை அர்ப்பணித்து விடிவெள்ளியாய் வீறு நடைபோட்டு வாழ்கின்றனர்.

கண்களுக்கும் கலை உணர்வுகளுக்கும் விருந்தாக நாடகங்கள் சமுதாயத்திற்கு வேண்டிய கருத்துக்களை நயமாக தெரிவிக்கின்றன. புலம்பெயர்ந்து வாழும் எமது அடுத்த தலைமுறையினரும் ஆக்கப்பூர்வமாக கருத்துக்களையும் கவிதைகளையும் தமிழிலே அழகாக சித்தரித்து மேடைகளிலே பிரதிபலிக்கின்றனர். வெறும் வாய்ப்பேச்சாக மட்டும் இல்லாமல் நடிப்புத் திறன் மூலமும் கலைகள் வளர்கின்றன.

நாடகங்கள் விழாவில் மேடையேறும் போது சமுதாய உணர்ச்சிக் கருத்துக்களை உன்னத நோக்கான உத்திகளையும் பாணிகளையும் கையாண்டு திறமையான நெறியாள்கை மூலமாக பார்வையாளரின் கலாரசனைக்கு விருந்தளித்து சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்து நாசுக்காகவும் நயமாகவும் அறக்கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. இது நாடகங்களின் சிறப்பம்சம் எனலாம்.

கலாச்சாரப்பண்பாடு அனைத்தும் ஈழத்து அறிஞர்களின் கருத்தாளம் மிக்க கவிதைவரிகள், இசைவடிவம் கொடுக்கும் பாடல் கணீரென்ற குரலில் தெளிவாக உச்சரித்து அசைக்கும் பொழுது தமிழ் சமுதாயத்தை இளந்தலை முறையினரை எழுந்து நிற்க செய்கின்றது. அரச அடக்கு முறையும் அதற்கெதிரான மக்கள் போராட்டமும் நடக்கும் இன்றைய உலகிலே உலக மக்கள் ஆலய வாசலில் ஆரவாரித்து கலையை வளர்க்கிறார்கள். மன ஆறுதலும் கூட அடைகிறார்கள்.

உலக மக்கள் அனைவரும் ஒரே குடும்பமாக ஆனந்தமாக வாழ்வதற்கு மனதிலே உள்ளார்ந்த உணர்வை வெளிப்படுத்த கலைகள் இன்றேல் மனித வாழ்வு இல்லை எங்கே நிம்மதி இதனாலன்றோ இசையால் வசமாகா இதயமெது என்கிறார்கள்.

எமது நாட்டின் பண்பாட்டுக்கும் மனித விழுமியத்திற்கும் அடிஅத்திவாரமாக திகழ்வது கலையும் கலாச்சாரமுமே. கலை என்னும் பொற்கால சக்தியினால் கல்வி என்னும் தலையான அறிவை மனதில் நிறுத்தி சிந்தித்தலுக்கு ஏற்ற விதத்தில் மக்களை திசை திருப்பிய கலைஞர்களையும் கலை உலகையும் எம்மால் பாராட்டாமல் இருக்க முடியுமா?

இயற்கை அன்னை மனிதனை அறிவு வளத்துக்குரிய மூளையோடு உணர்ச்சியும் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடு படைத்துள்ளார். சகல மனிதனையும் கலையையும் கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டு விட்டான். கலைகள் உலகெங்கும் சிகரம் வைத்தாற்போல கலாச்சார விழாக்கள் நடத்தப்பட்டு நாட்டின் பாரம்பரிய பண்பாடு பிரதிபலிக்கப்பட்டு வருகின்றது. ஏன் காகம் பறக்காத ஊர் இல்லை என்பார்கள் தமிழன் இல்லா நாடில்லை என்பார்கள். அதேபோல் கலைகள் இல்லா இடமில்லை என்று கூறும் அளவுக்கு கலை வளர்ந்து வருகிறது. தமிழர்கள் தாம் சென்ற இடமெல்லாம் திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவதுபோல கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சாரத்தையும் பேணிவருகிறார்கள். மூலை முடுக்கெல்லாம் கலையே நிறைந்துள்ளது.

கலை உலகுக்கு பெருமை தேடித்தந்த அறிஞர்களின் வரிசையை சொல்லில் அடங்கா ஏட்டிலே எழுத முடியாதவை. உலகிலே தனக்கென தனியான இடத்தை கலையும் கலாச்சாரமும் கொண்டு விளங்குகின்றது என்றால் மிகையாகாது. எனவே எம்போன்ற ரசிகர்கள் கலையையும் கலாச்சாரத்தையும் நன்கு பேணி எதிர்கால சுபீட்சத்துக்கு வழி வகுக்க வேண்டும்.

கலை வளர கலாச்சாரம் ஏணி ஏறும்.

''மண் உயிர் காக்கவென்றே
வளர்ந்திடும் கலைகள் தன்னை''
''நன்னியே நாமும் சென்று
நாவார வாழ்த்தி நிற்போம்''
''இன்பக்கலையை எமக்கென்று
மீட்டி நாம் வீரமுடனே''
''ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
நம் தேச நாட்டினிலே''
''கலைகள் தம்மை போற்றியே
நித்தமும் கலைகள் பூண்டு வாழுவோம்''
''வாடுகின்ற மக்கள் இனம்
மகிழ்ச்சி கொள்ளவே''
''மறுமலச்சியாய் கலைகளை
வளர்த்திடுவோம் வாழ்விலே''
''உலகாண்ட மக்கள் எல்லாம்
கலைகள் தன்னையே பல்லாண்டுகாலம்
பாரினிலே பாராட்டி வாழ்ந்திடுவோம்''
''கலை இன்றி நான் இல்லை
கவிதை இன்றி கம்பன் இல்லை''
''கலை வளர்ந்ததும் உன்னாலே
காதல் வந்ததும் கலையாலே''

கலைகளின் பிரதிபலிப்பே இன்று சினிமா, ஓவியம், சிற்பம், இசை, நடனம், கவிதை, நாடகம், பொம்மலாட்டம், கும்மி நடனம், பாம்பு நடனம், வில்லிசை என பலவகைப்பட்ட கூத்து நிகழ்ச்சிகளாக கலைகள் பரிணமித்து நிற்கின்றன. ஒவ்வொரு கலை நிகழ்ச்சியுமே ஒவ்வொரு கலாச்சாரத்தை பிரதிபலிக்கிறது.

**செ. வேலாயுதம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுப்பாட்டு
எழுதியவர்: திரு. ஞானம் பீரிஸ்,
நெறிப்படுத்தியவர்: சண்முகநாதன்



வசந்தன் நாடகம் நெறிப்படுத்தியவர் : புவனேந்திரன் குருசாமி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது தாய் மொழி

இதன் தலைப்பே இதற்கு விடை ஆகின்றது. எனது தாய் பேசும் மொழியே என் தாய் மொழி என்பது இதன் மூலம் உண்மையாகிறது. காலத்தின் கட்டாயத்தினால் என் பெற்றோர் இடம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் தஞ்சம் கோரியுள்ளார்கள். எனவே, இந்த நாட்டு பிரெஞ்சு மொழியை நான் இலகுவாக கற்றுக் கொள்ள முடிந்தது. அன்னையைப் போல், என் சமூகத்தையும் சேர்ந்தவர்கள் இடம் பெயர்ந்து எந்த நாட்டில் வசித்தாலும் அந்த நாட்டின் மொழி அறிவு எங்கள் கல்வியின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது. அதனால், அந்தந்த நாட்டு மொழிகள் எமது தாய்மொழி ஆகிவிட முடியாதல்லவா?

குழந்தைகள் பல மொழிகளைக் கற்றுக் கொள்ளவும், பேசவும் முடிந்தவர்களென ஆய்வு அறிக்கைகள் சொல்கின்றன. ஆம் அதுதான் உண்மை. நாம் எந்த நாட்டில் வசித்தாலும் நம் முன்னோர்களின் தமிழ் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் காலம் காலமாக வழி வந்தவர்கள். வேறு எந்த மொழியையும் தாய் மொழியாகக் கொள்வது சாத்தியமில்லை. புலம் பெயர் நாட்டில் வதிவிடம் பெற்றிருக்கும் சில பெற்றோர்கள் இந்த நாடுதான் எமக்கு நிரந்தரமென நினைத்து தங்கள் குழந்தைகளுக்கு தமிழ் மொழியை கற்றுக் கொடுக்க தவறியதால் எங்கள் சந்ததிகள் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். எமது அடுத்த சந்ததி தமிழ் ஈழத்தில் கால் பதிக்கும் போது, தாய் மொழியாம் தமிழைக் கற்றிருக்காவிட்டால் அவர்கள் நிலைப்பாடு என்ன?

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள் அங்கேயும் எங்களைப் பெற்றவருக்குத் தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆகவே எங்கள் தாய் மொழியாம் தமிழுக்கு நாமும் முதலிடம் கொடுத்து வளர்வதுதான் எமது கடமையாகும். எனது தாய்மொழி தமிழுக்கு மகத்தான பல வரலாறுகள் இருப்பது உண்மை. நம் முன்னோர்கள் பலர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்று, சாதனைகள் படைத்துள்ளார்கள். பலர் அரும்பெரும் தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளனர்.

எமது கலை, கலாச்சாரம் பண்பாடு இவையாவும் தமிழ் மொழி மூலம் அறிந்து கொண்டு, எமது முன்னோரின் பெருமைதனை, மேன்மேலும் மெருகூட்டும் வகையில் அவர் வழிவந்த தமிழ் குழந்தைகள் ஆகிய நாம் வாழ்ந்து காட்ட வேண்டும்.

எந்தச் சூழிலில் நாம் வாழ்ந்தாலும், பிறந்தாலும் அன்னை மண்ணின் அற்புதத் தாய் மொழியை மறந்தோமானால் அதுவே நாம் எம் மண்ணுக்குச் செய்யும் மிகப் பெரிய துரோகமாகும்.

என்னைப் போன்ற குழந்தைகளின், பெற்றோர்களின் பங்கு இங்கே மிகவும் அவசியமாகின்றது. எந்த மொழியையும் தாராளமாகக் கற்று தேர்ச்சியடையட்டும் அதனால் பலனுண்டு. ஆனால் பூர்வீகமாக பேணிப் பாதுகாத்து வந்த தாய்மொழி தமிழ்மொழி என்பதை மறந்து செயல்படவே கூடாது என்பது எனது கருத்து

தேன்மதுரத் தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவவேண்டுமென்று பாரதியார் கண்ட கனவு. உலகமெல்லாம் பரந்து வாழும் நம் தமிழ் சமுதாயத்தினால் நிதர்சனமாகிக் கொண்டிருப்பதை நாம் உணரும் இவ்வேளையில் இந்தப் பலமான அத்திவாரத்தில் என்போன்று சிறார்க்கும் பங்குண்டு. பெற்றோரின் ஆதரவும், ஆக்கப்பூர்வமான வழிநடத்தலோடும் தாய் மொழியின் பெருமைதனை உலகுக்கு எடுத்துச் செல்வோம்.

நாளைய நம் மண்ணின் சமுதாயத்தின் விடிவில் பெரும் பங்கு இடம் பெயர்ந்த என் போன்ற குழந்தைகளின் தமிழ் பற்றில் மிகவும் தங்கியுள்ளதென்பதை ஆணித்தரமாகக் கூறி என் தாய் மொழிக்கு நன்றி விசுவாசத்துடன் இருந்து எனது தாய் மொழி தமிழ் என்று கூறி எனது சிறு கட்டுரையை முடிக்கிறேன்.

**செல்வி டிலுஜா சுகுமார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தாய் மொழி



எனது தாய்மொழி தமிழ்மொழி. தமிழ்மொழி பழமையான மொழி. தமிழ்மொழி உலகெங்கும் பேசப்படும் மொழி. தமிழில் உள்ள சிறப்பு எழுத்து ''ழ'' ஆகும். தமிழ் நெடுங்கணக்கில் இருநூற்று நாற்பத்து ஏழு எழுத்துக்கள் உள்ளன. உயிரெழுத்து பன்னிரண்டும் மெய்யெழுத்து பதினெட்டும் ஆகும். ஆயுத எழுத்து ∴ ஆகும். சார்பெழுத்து இருநூற்று பதினாறு. காப்பியங்களில் முதன்மையானது தொல்காப்பியம் எனப்படும். தமிழ்மொழியில் இலக்கணம், இலக்கியம் என இருவகை உண்டு.

தமிழில் மிகச் சிறந்த இலக்கியங்கள் உள்ளன. அவற்றுள் ஐம்பெருங்காவியங்கள் மிகவும் சிறப்புடையன. அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன. தமிழ் முதன்மையான மொழி சிலப்பதிகாரம் குடிமக்களை முதன்மைப்படுத்தி எழுதப்பட்டதால் அது குடிமக்கள் காப்பியம் என அழைக்கப்படுகிறது. இது தமிழ் மக்களுடைய வாழ்க்கையும் பண்பாட்டையும் கூறுகிறது. இந்நூல் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது.

தமிழ்மொழிப் புலவர்கள் பலர் உள்ளனர். ஔவையார் சோமசுந்தரப் புலவர், சின்னத்தம்பி புலவர், திருவள்ளுவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். திருவள்ளுவர் திருக்குறளை எழுதியவர். 1330 குறள்கள் உண்டு. இவை கல்வி, வீரம், மானம், கொடை, அன்பு, விருந்தோம்பல் பற்றி அழகாக கூறுகின்றன. சுப்பிரமணிய பாரதியார் சிறுவர்களுக்கு பாப்பா பாடல்களைப் பாடியுள்ளார். அதைப்போல ஔவையார் நன்னெறிப் பாடல்களையும், பாரதிதாசன் (கனகசுப்பிரத்தினம்), காசி ஆனந்தன் போன்றோர் சிறந்த பாடல்களையும் கவிதைகளையும் எம்மொழி வளர்ச்சிக்கு எழுதியுள்ளனர். தமிழறிஞர் கம்பனின் நினைவாகவும், வள்ளுவர் நினைவாகவும் பாரிஸில் ஆண்டுதோறும் விழா எடுக்கின்றனர்.

தமிழில் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுடையது. இதனை முத்தமிழ் என அழைப்பர். வாழ்வில் இசை மிகவும் இன்றியமையாதது. தமிழில் கிராமிய இசை, நாட்டார் பாடல், தாலாட்டுப் பாடல் என்பன வாழ்வோடு இணைந்த கிராமத்து மண் வாசனையை எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்மொழி உலகில் வாழும் மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இன்று ஐரோப்பிய நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எம்மைப்போன்ற சிறார்கள் தமிழ்ச்சோலைகள் ஆரம்பித்து தமிழை வளர்த்து வருகின்றனர்.

ஈழத் தமிழர்கள் தாய்மொழியின் விடுதலைக்காகவும் மண்ணின் விடிவுக்காகவும் தம் உயிரைக் கொடுத்துப் போராடி வருகின்றனர்.

வாழ்க தமிழ் மக்கள்!
வளர்க தமிழ் மொழி!!

சுஜித்திரா சிவனேசமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தாய் மொழி



நான் ஒரு மொழியை கற்றாலும் அம்மொழி வளத்தால் நாடுகள் தோறும் பறந்து திரிந்தாலும் நமக் கென்று ஒரு மொழி உண்டு அதுதான் நம் தாய்மொழி, தமிழ் மொழி என்று கூறிக்கொள்வதில் நாம் பெருமை அடைகின்றோம். எனது தாய் மொழி தொன்மையானது. தமிழில் முதலெழுத்துக்கள் முப்பது ஆகும். அவை உயிர் எழுத்து பன்னிரண்டு, மெய்யெழுத்து பதினெட்டாகும். உயிர் எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் சேர்ந்து உயிர்மெய்யெழுத்துக்கள் ஆகின்றன. இவற்றுடன் ஆயுத எழுத்தும் சேர்ந்து தமிழ் நெடுங்கணக்கில் எல்லாமாக இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் உள்ளன. தமிழ் என்னும் மூன்றெழுத்துக்களில் ஒன்று «வல்லினம்» அடுத்தது «இடையினம்» இன்னொன்று «மெல்லினம்» என அமைந்திருப்பது விஷேடமானதாகும். இதனை விட தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என மூன்று, பிரிவுகளையும் கொண்ட மொழியாகும் «தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்»

என்பதை மறவாமல் எங்கள் தமிழ் மொழி வளர அயராது உழைப்போம். என்தாய் மொழியாம் தமிழ் மொழியை எந்த ஒரு சுவைக்கும் ஒப்பிடமுடியாது. இத்தகைய அரியதும் இனியதுமான பெருமை வாய்ந்ததுமான எமது தமிழ் மொழி தாய் மொழியாகக் கிடைத்தது பெருமைக்குரியது.

«வாழ்க தமிழ் ! வளர்க தமிழ் மொழி»

வரதராஜா அரவிந்
வயது 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தாய் மொழி



எனது தாய் மொழி தமிழ் ஆகும். தமிழ் மொழி தொன்மையானது. தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தேழு ஆகும். தமிழுக்கு மட்டுமென உள்ள சிறப்பு எழுத்து 'ழ' ஆகும். நமது தாய் மொழியை தீந்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ் என்றும் அழைப்போம். தமிழில் இயல், இசை, நாடகம், ஆகிய மூன்று பிரிவுகள் சேர்ந்து முத்தமிழ் எனப்படும். தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள் உள்ளன. அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பனவாகும்.

தமிழில் பல புலவர்கள், மேதைகள், கவிஞர்கள் உள்ளனர். அவர்களுள் சிலப்பதிகாரத்தை எழுதிய இளக்கோ அடிகள், மணிமேகலையை எழுதிய சீத்தலை சாத்தனார் இன்னும் பல பாடல்களையும், கவிதைகளையும் எழுதிய மகாகவி பாரதியார் என்பவர்கள் சிறப்புக்குரியர்கள். பாரதியார் குழந்தைகளுக்காக பல பாடல்களை எழுதினார்.

தமிழில் பல பெண்புலவர்களும் இருந்தார்கள். அவர்களில் ஔவையார் குறிப்பிடத்தக்கவர். அவர் சிறுவர்களுக்கான பாடல்களையும், பல நல்ல கருத்துக்களைக் கூறும் ஆத்திசூடியையும், மூதுரையையும் இன்னும் பல அரிய நூல்களையும் எழுதினார். அவர் எழுதிய மூதுரைகளில் ஒன்று

நல்லோரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே

பல நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு பெரிய அறிஞர் திருவள்ளுவர் ஆவார். அவர் திருக்குறள் என்னும் ஒரு நீதி நூலை எழுதினார். திருக்குறள் மக்கள் எவ்வாறு வாழவேண்டும் எனக் கூறுகின்றது. திருக்குறள் 1330 குறள்களைக் கொண்டது. திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது தமிழுக்கு கிடைத்த கிரீடம் ஆகும்.

எம் இனிய தமிழால் ஈர்க்கப்பட்டு எமது தமிழ்ப்பகுதிகளுக்கு வந்து தமிழ்ப்பணி, சமயப்பணி ஆற்றியவர்கள் பலர். அவர்களுள் ஒருவர் இத்தாலி நாட்டுக்காரரான கொண்சன்ரைன் ஜோசப் பேசி என்னும் பாதிரியார் ஆவார். அவர் பிரெஞ்சுக்காரர்களும் பிற ஐரோப்பியர்களும் தமிழ் கற்றுக் கொள்ளவும், தமிழர்கள் பிரெஞ்சைக்ககற்கவும், தொன்னூல் இலக்கணம், சதுரகாரதி என்கிற நூல்களையும், திருக்குறளையும் பிரெஞ்சிலும் இலத்தீனிலும் மொழி பெயர்த்தார். தமிழ்மொழியால் ஈர்க்கப்பட்டே இவற்றைச் செய்தார். இவை எல்லாம் எமது தமிழுக்கு கிடைத்த மகுடங்களே

இப்படியான இனிய மொழியை எமது தாய்மொழியாகக் கொண்டதற்காக நாம் பெருமைப்படலாம்.

தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

**ஜெயதாஸ் கீர்த்தனா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழா மலரில் பிரசுரிப்பதற்கு கட்டுரைகள், கவிதைகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள் எழுதியனுப்பிய கல்விமான்களுக்கும், பெரியார்களுக்கும், விளம்பரங்கள் வழங்கியதன் மூலம் எமது மலர் வெளியீட்டிற்கு ஆதரவளித்த வர்த்தகப்பெருமக்களுக்கும், குறுகிய காலத்தில் மலரை சிறப்பாக வெளியிட உதவிய சங்கீதா அச்சகத்தினர்க்கும், இவ்விழா சிறப்பாக நடைபெற சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய எமது கழக உறுப்பினர்களுக்கும், கலைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்து சிறப்பித்த கலைக்குழுவினர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும், சொற்பொழிவுகளை நடத்திய பெருந்தகையாளர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் ஏனைய அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

வணக்கம்

பாலர் ஞானோதயா நற்பணி மன்றம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஷான் சுப்பர் மார்சே

Import - Export




உங்களுக்குத் தேவையான அனைத்து
மளிகை பொருட்களையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம்.
இலங்கை, இந்திய கடலுணவு மற்றும்
மரக்கறி வகைகளையும்
மிக மலிவாக பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

64, Rue Louis Blanc
75010 Paris
Tél. / Fax : 01 44 72 06 03
M° : La Chapelle / Gare du Nord

37, Av. Paul Vaillant Couturier
93120 La Courneuve
Tél. / Fax : 01 48 35 45 03
M° / Tramway / Bus : La Courneuve

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் ஸ்டைல்
## டெக்ஸ்டைல்ஸ்



# INDIAN STYLE TEXTILES

புத்தம் புதிய சாறி வகைகள், முகூர்த்தப்புடவைகள், பட்டு வேட்டிகள், பலவர்ண நவீன ஆடைகள், சிறியோர் முதல் பெரியோர் வரையான ரெடிமேட் உடைகள், பெண்களுக்கான அழகு சாதனப் பொருட்கள்

SAREE, CHUTIDAR, KURUDHA, FANTASY JEWELLS

சிகையலங்காரம் செய்து கொள்வதற்கும், தேவையான ஓடியோ, வீடியோ, DVD கசட்டுகள், சகல சினிமா படங்கள், சின்னத்திரை தொடர்கள், வாடகைக்கும் பெற்றுக்கொள்ளநாடுங்கள்.

**19, Av. Paul Vaillant Couturier**
**93120 LA COURNEUVE**
**Tél : 01 48 36 15 60**
**(Métro / Tram : LA COURNEUVE 8 MAI 1945)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org